# மறுப்பிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்

ஜொகூர், சா ஆ தர்மா மண்டபத்தில்
துறவி அவர்கள் ஆற்றிய
உரையின் தொகுப்பு

# மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தன் முன்னாள் பிறப்பை நினைவுபடுத்திய ஒரு குழந்தையின் கதை | 5 |
| 2. | மறுபிறப்பு உண்டா? | 11 |
| 3. | நாம் எண்ணிக்கையற்ற பிறப்புகளை எடுத்துள்ளோம் | 15 |
| 4. | ஆறு வகை பிறப்புகள் | 16 |
| 5. | மானிட உலகில் ஏன் தர்ம உபதேசம் பிரகடனம் செய்யப்படுகிறது | 24 |
| 6. | தர்ம உபதேசத்தை மனமுவந்து ஏற்போர் சிலரே | 27 |
| 7. | மானிட வாழ்க்கை | 31 |
| 8. | நரகத்தையும் பேய்ப்யிறப்பையும் மிருகப்பிறப்பையும் எல்லாத் துன்ப நிலைகளையும் கடக்கும் வழிகள் | 36 |
| | 8.1 எப்போது ஒருவர் நல்லொழுக்கமும் பக்தியும் உடையவர் ஆகிறார் | 38 |
| | 8.2 தெய்வலோகம்செல்வதற்குரிய நான்கு வழிகள் | 39 |
| | 8.3 குற்றமுள்ள நெஞ்சும் அச்சமும் | 43 |
| | 8.4 தர்மக் கண்ணாடி | 50 |
| | 8.5 பிறருக்கு அறிவுரை கூறுதல் | 54 |
| | 8.6 மன்னாதி மன்னர் | 59 |
| 9. | மந்திரி நந்திகர் | 62 |
| 10. | சொர்க்கத்தில் பிறந்த அனாத பிண்டகர் | 63 |
| 11. | அரிது அரிது மானிடப் பிறப்பு | 69 |

# மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்

## *1. தன் முன்னாள் பிறப்பை நினைவுபடுத்திய ஒரு குழந்தையின் கதை.*

டாக்டர் ஸ்டீவன்சன், அமெரிக்காவிலுள்ள வெர்ஜீனியா பல்கலைக் கழகத்தில் ஒரு பேராசிரியராவார். இவர் மறுபிறப்பு சம்பந்தமாகப் பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து வந்தார். இவர் பல நாடுகளுக்குச் சென்று, தம் முன்னால் பிறப்பை ஞாபகப்படுத்திய பலரை நேரில் சந்தித்துப் பேசினார். அவர்களுடைய பெற்றோர், உறவினர்கள், அவர்களுக்கு அறிமுகமானவர்கள் பலரையும் இவர் சந்தித்துப் பேசினார்.

இவருடைய ஆராய்ச்சியின் ஒரு நிகழ்வு இது. இது ஒரு கற்பனைக் கதை அன்று. தன்னுடைய முன்னால் பிறப்பை ஞாபகப் படுத்திய ஒரு குழந்தையின் உண்மையான கதை இது.

கமால்ஜிட் கோர், இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் உள்ள ஒரு கிராமத்தில் பிறந்தாள். இவள் தந்தை ஒரு பள்ளி ஆசிரியர். இவள் பிறந்த குடும்பத்தினர் சீக்கிய மதத்தைத் தழுவியவர்கள். இவள் பிறந்த குடும்பத்தில் வறுமை இல்லை. அந்தக் கிராமத்தில் வசதியாக வாழ்ந்த குடும்பங்களில் இவள் குடும்பமும் ஒன்று.

இவள் சுமார் இரண்டு வயதை அடைந்தபோது, சொற்களை வாக்கியங்களில் அமைத்துப் பேசும் ஆற்றலைப் பெற்றாள். இவள் பேசுவதைக் கேட்டுப் பெற்றோர் திகைத்தனர்.

தன் பெயர் கமால்ஜிட் கோர் இல்லை என்றும்; தன் உண்மையான பெயர் ரிஸ்மா என்றும் பெற்றோரிடம் கூறுவாள் . தனக்கு மற்றொரு தாயும் தந்தையும் உள்ளனரென்றும், தனக்கு மற்றொரு வீடு உண்டென்றும்; அந்த

வீட்டில் தன்னுடைய மற்ற தாயும் தந்தையும் வாழ்ந்து வருவதாகவும் கூறுவாள்.

அந்த வீட்டில் வாழ்ந்தபோது, தான் பள்ளிக்குப் போனதாகவும். பள்ளியில் தனக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள் என்றும் கூறி, சில நண்பர்களின் பெயர்களையும் கூறுவாள். இவள் பேச்சைக் கேட்டுத் திகைப்புற்ற பெற்றோர், "இவை யாவும் குழந்தையின் கற்பனை" என எண்ணினார்கள்.

இவள் இன்னும் பள்ளிக்குப் போகவில்லை. இவளுக்கு முறையாக வாசிக்கத் தெரியாது. ஆனாலும், இவள் வீட்டிலுள்ள புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு, வாசிப்பதுபோல் பாவனை செய்வாள்.

இவளிடம் காணப்படும் ஒரு தனிப் பழக்கத்தை பெற்றோர் கவனித்து வந்தனர். கமால்ஜிட் கோருக்கு மிகவும் பிடித்தமான வர்ணம் சிவப்பு. சிவப்பு நிற ஆடைகளையே மிகவும் விரும்பி அணிவாள். தன் பெற்றோரிடமும் எப்பொழுதும் சிவப்பு நிற ஆடைகளையே விரும்பிக் கேட்பாள்.

ஒரு நாள் இவள் தந்தை, பக்கத்துக் கிராமத்தில் நடந்த சந்தைக்கு இவளை அழைத்துச் சென்றார். தன் தந்தையுடன் சந்தைக்கு வந்த கமால்ஜிட் கோருக்கு, திடீரெனத் தன் முன்னாள் பிறப்பின் பல சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. சற்றுத் தூரத்திலுள்ள மற்றொரு கிராமத்தின் பெயரைக் கூறி, அங்குத் தன்னை அழைத்துச் செல்லும்படி தன் தந்தையை வற்புறுத்தினாள்.

தூரத்திலுள்ள அக்கிராமத்திற்கு இவள் இதுவரை சென்றதில்லை என்பதால்; இவர்களுக்கு உறவினர்களோ அல்லது அறிமுகமானவர்களோ எவரும் அக்கிராமத்தில் இல்லை என்பதால், மகளின் கோரிக்கையைக் கேட்டு ஆச்சரியப்பட்ட தந்தை, "எதற்காக அங்குப் போக வேண்டும்" என மகளிடம் கேட்டார்.

"இது என்னுடைய கிராமமில்லை. இங்கு எனக்கு நண்பர்கள் இல்லை. அதுதான் என்னுடைய கிராமம். அங்குதான் என்னுடைய நண்பர்கள் இருக்கிறார்கள். அங்குதான் என்னுடைய வீடு இருக்கிறது" எனக்கூறினாள்.

"நானும் என் தோழியும் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தோம். திடீரென ஒரு பஸ் எங்களை மோதித் தள்ளியது. என் தோழி அங்கேயே இறந்துவிட்டாள். எனக்குத் தலையிலும், காதிலும், மூக்கிலும் காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்தது."

அடிபட்ட இடத்திலிருந்து என்னைச் சிலர் தூக்கிச் சென்றார்கள். அருகிலிருந்த ஒரு வழக்கு மன்றத்தின் முன், ஒரு மேசையில் என்னைக் கிடத்தினார்கள். பிறகு என்னைக் கிராமத்து மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றார்கள். என் பெற்றோரும் உறவினர்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள். எனக்கு ஏற்பட்ட காயங்களிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டே இருந்தது. என் தாய் என் நிலையைக் கண்டு அழுதாள்.

"கிராம மருத்துவ மனையில் என்னைக் குணப்படுத்த முடியவில்லை. அதற்கான வசதியும் அங்கில்லை. என்னை அம்பாலாவிற்கு (அருகிலுள்ள ஒரு பட்டணம்) கொண்டு சென்றார்கள். அங்குள்ள மருத்துவர்களும் என்னைக் குணப்படுத்த இயலவில்லை எனக்கூறிவிட்டனர்."

"எனக்கு மருத்துவ மனையில் இருப்பதற்குப் பிடிக்கவில்லை. என் பெற்றோரிடம் என்னை வீட்டிற்குக் கொண்டு போகும்படி கேட்டுக் கொண்டேன். பெற்றோர் என்னை ஒரு மோட்டார் வண்டியில் வீட்டிற்குக் கொண்டு வந்தனர். வரும் வழியில் வண்டியின் விளக்கு அணைந்துவிட்டது" எனத் தன் முன்னால் பிறப்பின் விபரங்களைக் கூறி, தன்னை அந்தக் கிராமத்திற்கு அழைத்துச் செல்லுமாறு தந்தையை வற்புறுத்தினாள். இதைக் கேட்ட தந்தை வியப்புற்றார்.

"அந்தக் கிராமத்தில் நமக்கு உற்றார் உறவினர்களோ, தெரிந்தவர்களோ எவரும் இல்லை; உன் நண்பர்கள் யாவரும் நம்முடைய கிராமத்தில்தான் இருக்கிறார்கள்" எனக்கூறி மகளைச் சமாதானம் செய்து வீட்டிற்கு அழைத்துவர முயன்றார். ஆனால், இவளோ வீட்டிற்குப் போக மறுத்துவிட்டாள். தன்னுடைய கிராமத்திற்கு அழைத்துச் செல்லும்படி தந்தையை வற்புறுத்தினாள். அவசியம் கூட்டிப் போவதாக வாக்களித்து, வேறொரு நாளில் அங்கு போகலாம் எனக் கூறி மகளை வீட்டிற்கு அழைத்து வந்தார்.

இவை யாவும் ஒரு குழந்தையின் கற்பனை என்று எண்ணிய தந்தை, மகளின் வற்புறுத்தலை நிராகரிக்க இயலாதவராய், அவளைச் சமாதானப் படுத்தக் கருதி, அந்தக் கிராமத்திற்கு அழைத்துச் சென்றார்.

இருவரும் பஸ் ஏறி அந்தக் கிராமத்திற்குச் சென்றார்கள். தந்தையும் மகளும் கிராமத்தை நெருங்கும் போதே இவள் கிராமத்தை அடையாளம் கண்டு கொண்டாள். அது ஒரு பெரிய கிராமம். இவள் கிராமத்தை நன்றாகத் தெரிந்தவள் போல் நடந்து கொண்டாள்.

அங்கிருந்த சில முக்கியக் கட்டடங்களைத் தந்தையிடம் சுட்டிக் காண்பித்து, அவற்றின் பெயரைக் கூறினாள். தன்னைப் பஸ் மோதித் தள்ளிய இடத்தையும் தன் தந்தையிடம் காண்பித்தாள். வெளியூரிலிருந்து வந்த ஒருவருக்கு, உள்ளூரிலுள்ள ஒருவர் கிராமத்தைப் பற்றி விபரிப்பதுபோல் தந்தைக்குக் கிராமத்தின் முக்கியப் பகுதிகளைப் பற்றி விபரித்துக் கூறினாள்.

"என் வீட்டிற்குப் போகலாம். ஒரு ரிக்ஷாவைக் கூப்பிடுங்கள்" என்று தந்தையிடம் கூறினாள். தந்தையுடன் ரிக்ஷாவில் ஏறி அமர்ந்த பின், ரிக்ஷாக்காரனுக்குத் தன் வீட்டிற்குச் செல்லும் வழியைக் காட்டினாள். நெருக்கமாக சில வீடுகள் இருந்த பகுதியை அடைந்ததும், இங்குதான் என் வீடு இருக்கின்றது எனக்கூறி ரிக்ஷாவை நிறுத்தச் சொன்னாள்.

ரிக்ஷாவிலிருந்து இறங்கியதும், ஒரு வீட்டைச் சுட்டிக் காண்பித்து, அதுதான் என் வீடு " எனத் தந்தையிடம் கூறியவள் சிறிதும் தயக்கமின்றி, வீட்டை நோக்கி விரைவாக நடந்தாள். மகளின் கையைப் பிடித்துக் கொண்டு பின் சென்ற தந்தை இப்போது தயங்கினார்.

"ஒரு குழந்தையின் பேச்சைக் கேட்டுக் கொண்டு இவ்வளவு தூரம் வந்துவிட்டோமே! இப்போது இவர்களிடம் என்னவென்று சொல்வது" எனத் தயங்கினார்.

மகள் காண்பித்த வீட்டிற்கு நேராகச் செல்லாமல், அருகிலிருந்த மற்றொரு வீட்டிற்குச் சென்றார். கமால்ஜிட் கோர் விபரிப்பது போல், அந்தக் கிராமத்தில் தம் மகளை இழந்துவிட்ட குடும்பம் ஏதேனும் உண்டா என்று விசாரித்தார்.

"என்னுடைய வீடு " என்று கமால் ஜிட் கூறிய வீட்டை அவர்கள் சுட்டிக் காண்பித்து, "அந்த வீட்டில் அப்படி ஒரு குடும்பம் வாழ்கிறது எனக்கூறினார்கள்.

"அவர்களுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் பெயர் ரிஸ்மா. அவளைப் பஸ் மோதித் தள்ளிவிட்டது. மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றார்கள். மருத்துவர்கள் அவளைக் குணப்படுத்த முடியாது என்று கூறிவிட்டார்கள். மருத்துவமனையிலிருந்து , ஒரு மோட்டார் வண்டியில் அவளை வீட்டிற்குக் கொண்டு வந்தார்கள். வீட்டிற்கு வருகிற வழியில், மோட்டார் வண்டியிலேயே அவள் இறந்துவிட்டாள். அப்போது அவளுக்கு வயது பதினாறு " எனக்கூறினார்கள்.

கமால்ஜிட் கோரின் தந்தை இதைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்தார். வீட்டிற்குத் திரும்பிப் போகலாம் என மகளை அழைத்தார். ஆனால், மகளோ நேராக அந்த வீட்டிற்குச் சென்றாள். வீட்டில் உள்ளவர்களிடம் பள்ளிப் போட்டோவைக் கேட்டாள். (அதாவது ரிஸ்மா தன் பள்ளி நண்பர்களுடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தைக் கேட்டாள்) அதை வாங்கி மிக்க மகிழ்ச்சியுடன் பார்த்தாள். புகைப்படத்திலுள்ள ரிஸ்மாவைக் காட்டி, "இதோ நான்" எனக்கூறினாள். மற்றவர்கள் யாவரும் தன் நண்பர்கள் எனக்கூறி, ஒவ்வொருவருடைய பெயரையும் சரியாகக் கூறினாள்.

ரிஸ்மாவின் தாத்தாவும், மாமன்மார்களும் வீட்டிற்கு வந்தபோது, அவர்களையும் அடையாளம் கண்டு கொண்டாள். அவர்களுடைய பெயரையும் சரியாகக் கூறினாள். கமால்ஜிட் கோர் தன் முன்னாள் உறவினர் பலரை அடையாளம் கண்டு கொண்டாள்.

தன்னுடைய தற்போதைய தந்தையை அந்த வீட்டிலுள்ள ஓர் அறைக்கு அழைத்துச் சென்று, "இது என்னுடைய அறை " எனக்கூறினாள். அந்த வீட்டிலுள்ள ஒவ்வோர் அறையையும் தந்தைக்குக் காண்பித்தாள்.

பிறகு தன்னுடைய பள்ளிப் புத்தகங்களையும், தன்னுடைய இரு வெள்ளிக் காப்புகளையும், தன்னுடைய இரண்டு ரிப்பன்களையும், தன்னுடைய புதிய சிவப்பு ஆடையையும் கேட்டாள்.

இவை எல்லாம் ரிஸ்மாவிற்குச் சொந்தமைனவை என அந்த வீட்டினர் கமால்ஜிட் கோரின் தந்தையிடம் கூறினார்கள். ரிஸ்மாவிற்கு ஒரு புதிய சிவப்பு ஆடை கொடுக்கப்பட்டது என்றும், அதை அவள் மிகவும் விரும்பினாள் என்றும், ஆனால், அதை அணியும் வாய்ப்பு அவளுக்குக் கிட்டவில்லை என்றும் கூறினார்கள்.

"நேரமாகிவிட்டது, பஸ்ஸைத் தவற விட்டுவிடுவோம். வா நாம் நம் வீட்டிற்குச் செல்வோம்" எனத் தந்தை அழைத்தபோது, இவள் போக மறுத்தாள்.

"இதுதான் என்னுடைய வீடு. நான் இங்கேயே இருக்கப் போகிறேன்" எனக்கூறி தந்தையுடன் செல்ல மறுத்தாள். தந்தை அவளைச் சமாதானப்படுத்துவதற்காக அன்று இரவு அங்கேயே மகளுடன் தங்கினார். ஒருவாறாகத் தந்தை அவளைச் சமாதானப்படுத்தி மறு நாள் வீட்டிற்கு அழைத்து வந்தார்.

ரிஸ்மாவின் குடும்பத்தினர் பணக்கார விவசாயக் குடும்பம். அவர்கள் இந்து மதத்தைத் தழுவியவர்கள். கமால்ஜிட் கோர், உண்மையில் ரிஸ்மாவின் மறுபிறப்புத்தான் என்பதை ரிஸ்மாவின் குடும்பத்தினர் ஏற்றுக் கொண்டனர்.

ரிஸ்மா இறந்த தேதியையும் கமால்ஜிட் கோர் பிறந்த தேதியையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது, ரிஸ்மா இறந்து பத்து மாதங்கள் சென்ற பின் கமால்ஜிட் கோர் பிறந்திருக்கிறாள் எனத் தெரிய வந்தது.

கமால்ஜிட் கோர், தன்னுடைய முன்னால் பிறப்பில் இறுதியாக நினைவுபடுத்தக் கூடியது, மருத்துவமனையிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வரும்போது, மோட்டார் வண்டியின் விளக்கு அணைந்து போனதுதான். இது அநேகமாக அவளுடைய மரணத்தைக் குறிக்கலாம்.

நமக்கு முற்பிறப்புகள் உண்டென்றால், ஏன் நம்மால் அவற்றை நினைவுபடுத்த முடியவில்லை என்று சிலர் கேட்கலாம். ஆனால், ஒன்றை நம்மால் நினைவுபடுத்த முடியவில்லை என்பதால் அது இல்லை என்று ஆகிவிடாது.

நம்முடைய குழந்தைப் பருவத்தை நம்மால் நினைவுபடுத்த முடிவதில்லை. நம்முடைய குழந்தைப் பருவத்தை நம்மால் நினைவுபடுத்த முடியவில்லை என்பதால், நமக்குக் குழந்தைப் பருவம் இருந்ததில்லை என்றாகாது.

இந்தப் பிறப்பின் குழந்தைப் பருவத்தையே நம்மால் நினைவுபடுத்த முடியாதபோது, முன்னால் பிறப்பை எவ்வாறு நினைவுபடுத்துவது?

ஒரு மாதத்திற்கு முன், ஒரு குறிப்பிட்ட நாளில், தன்னுடைய செயல்களையும், அனுபவங்களையும் எத்தனை பேர் நினைவுபடுத்த முடியும். ஏன் ஒரு மாதம். ஒரு வாரத்திற்கு முன் ஒரு வெள்ளிக் கிழமை, தான் பேசியவை, செய்தவை, அனுபவித்தவை ஆகிய இவற்றை எல்லாம் முழுமையாக எத்தனை பேர் நினைவுபடுத்த முடியும்?

காலையில் எண்ணிய எண்ணங்கள், பேசிய வார்த்தைகள் யாவற்றையும் மாலையில் மறந்துவிடுகிறோம். மறந்துவிட்டோம் என்பதால், நினைவுபடுத்த முடியவில்லை என்பதால், காலையில் நாம் அந்த எண்ணங்களை எண்ணவில்லை, அல்லது அந்த வார்த்தைகளைப் பேசவில்லை என்று ஆகாது.

இப்பிறப்பில், ஒரு மாதத்திற்கு முன் நாம் வாழ்ந்த வாழ்வையே நாம் மறந்துவிட்டோம். அப்படி இருக்கும்போது, முற்பிறப்பில் நாம் வாழ்ந்த வாழ்வை எப்படி நினைவுபடுத்துவது?

ஆகவே, முற்பிறப்பை நம்மால் நினைவுபடுத்த முடியவில்லை என்பதால், நம் முன்னால் வாழ்வை நம்மால் நினைவுபடுத்த முடியவில்லை என்பதால், முற்பிறப்பு இல்லை என்று கொள்ளலாகாது.

---

## *2. மறுபிறப்பு உண்டா?*

மனித வாழ்வு பிறப்பில் ஆரம்பித்து இறப்பில் முடிந்து விடுவதுபோல் நமக்குத் தோன்றுகிறது. ஆனால், இது உண்மை அல்ல எனப் பெரியோர்கள்

கூறியுள்ளார்கள். இப்பிறப்பிற்கு முன், நாம் ஒவ்வொருவரும் எண்ணிக்கையற்ற பிறப்புகளை எடுத்துள்ளோம் என்றும்; இப்பிறப்பு முடிவுற்ற பின், மரணத்திற்குப் பின்னும், வேறு புதிய பிறப்புகளில் நம் வாழ்வு தொடரும் என்றும் கூறியுள்ளார்கள்.

நம் வாழ்வு இப்பிறப்பில் ஆரம்பிக்க வில்லை என்றும்; மரணத்தோடு நம் வாழ்வு முடிவதுமில்லை என்றும்; முற்பிறப்புகளில் நாம் செய்த செயல்கள் கட்டிய கூடே நம்முடை ய தற்போதைய மானிடப் பிறப்பு என்றும்; மரணத்திற்குப் பின் அவரவர் செயல்களுக்க ஏற்றவாறு மறு பிறப்புகளில் வாழ்வு தொடரும் என்றும் கூறியுள்ளார்கள்.

ஆனால், நம்மில் பலர் இதனை நம்புவதில்லை; ஏற்பதில்லை; இவை யாவும் மனிதனின் கற்பனைகள் என்பார்கள்.

இவர்களில் சிலர், நான் முற்பிறப்புகள் எடுத்துள்ளேன் என்றால், ஏன் ஒன்றைக்கூட என்னால் நினைவுபடுத்த இயலவில்லை; மறுபிறப்பு உண்டென்றால், மறு உலகில் உயிர்கள் தம் செயல்களின் பலனை அனுபவிக்க வேண்டுமென்றால், மறுபிறப்புகளை ஏன் நம்மால் காணமுடிவதில்லை.

"என் அறிவிற்கும் சிந்தனைக்கும் விளங்காதவற்றில் எனக்கு நம்பிக்கை இல்லை. என்னால் காணமுடியாதவற்றில் எனக்கு நம்பிக்கை இல்லை” என்பார்கள்.

இவ்வாறு கேட்போருக்குப் பெரியோர் கூறும் பதில் இதுவே!

நம்மால் ஒன்றைக் காண முடியவில்லை என்பதால், அது இல்லை என்று ஆகிவிடாது. "என்னால் காணமுடியாத ஒன்றில் எனக்கு நம்பிக்கை இல்லை" என்று சொல்வது அறிவுடைமை ஆகாது. ஏன்?

குருடன் ஒருவன் எதையும் காண முடியாது. குருடன் ஒருவன் ஒரு பொருளைக் காணமுடியவில்லை என்பதால், அப்பொருள் இல்லை என்று ஆகிவிடாது, குருடனால்தான் அப்பொருளைக் காணமுடியவில்லையே தவிர , பார்வை உடையோர் அப்பொருளைக் காண முடியும்.

உதாரணத்திற்கு, பார்வை இல்லாத குருடனால், சிவப்பு, பச்சை போன்ற வர்ணங்களைக் காண முடிவதில்லை, "என்னால் சிவப்பு பச்சை போன்ற வர்ணங்களைக் காண முடியவில்லை ; சிவப்பு, பச்சை போன்ற வர்ணங்களில் எனக்கு நம்பிக்கை இல்லை; பச்சை, சிவப்பு போன்ற வர்ணங்கள் இல்லை; இவை யாவும் உங்கள் கற்பனைதான்" எனக் குருடன் பேசுவது முறையாகாது. ஏன்?

பார்வை உடையோர் சிவப்பு, பச்சை போன்ற வர்ணங்களைக் காண முடியும்; வர்ணங்கள் உண்டு; வர்ணங்கள் வெறும் கற்பனை அல்ல.

"உடலைவிட்டு உயிர் பிரிந்தபின், உயிர்கள் மீண்டும் பிறப்பதை என்னால் காணமுடியவில்லை; மரணத்திற்கு அப்பால், அடுத்த உலகில், உயிர்கள் தம் செயல்களின் பலனை அனுபவிப்பதை என்னால் காண முடியவில்லை; ஆகவே இவற்றில் எனக்கு நம்பிக்கை இல்லை" எனப் பேசுவோர் இந்தக் குருடனைப் போன்றவர்கள்தான். ஏன்?

உயிர்கள் இறந்து மீண்டும் பிறப்பதை இவர்களால் காணமுடியாத போதிலும், அவற்றைக் கண்டோர் உண்டு; கண்டு உலகிற்கு அறிவித்தோர் உண்டு.

உயிர்கள் இறந்து மீண்டும் பிறப்பதை மனிதர்கள் தம் கண் பார்வையினால் காணமுடியாது என்றும், பூரண ஞானப் பார்வையினால் மட்டுமே இவற்றைக் காண முடியும் என்றும், கண்டோர் கூறியுள்ளார்கள்.

குருடன் வர்ணங்களைக் காண வேண்டும் என்றால், அவன் கண் பார்வையைப் பெற வேண்டும். எப்போது கண் பார்வையைப் பெறுகின்றானோ, அப்போதுதான் குருடன் வர்ணங்களைப் பார்க்க முடியும்.

அதுபோல், உயிர்கள் இறந்து மீண்டும் பிறப்பதைக் காண விரும்புவோர், பூரண ஞானப் பார்வையைப் பெற வேண்டும். அப்போதுதான் அவர்கள் இவற்றைக் காணமுடியும். பூரண ஞானப் பார்வையைப் பெறாதவரை, உயிர்கள் இறந்து மீண்டும் பிறப்பதை எவராலும் காணமுடியாது.

"பூரண ஞானப் பார்வையைப் பெற்றோர் உண்டா? பூரண ஞானப் பார்வையினால், உயிர்கள் இறந்து மீண்டும் பிறப்பதைக் கண்டு, இவ்வுலகிற்கு அறிவித்தோர் உண்டா?" எனச் சிலர் கேட்கலாம்.

உண்டு. பகவான் புத்தர் இவ்வாறு அறிவித்துள்ளார்:

***ததாகதர் (பகவான் புத்தர்) தம் பூரண ஞானப் பார்வையினால் உயிர்கள் இறந்து மீண்டும் பிறப்பதை அறிவார். உயிர்கள் இறந்தபின், அவரவர் வினைப் பயனுக்கு ஏற்றவாறு, மீண்டும் எங்குப் பிறக்கிறார்கள் என்பதைத் ததாகதர் தம் பூரண ஞானப் பார்வையினால் பார்க்க முடியும்.***

***"தவறான கருத்தினால், சான்றோர் அருளிய தர்ம உபதேசங்களை இகழ்ந்து; எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் தீமை செய்தோர், உடலை விட்டு உயிர் பிரிந்தபின், நரகத்திலும் மற்ற துயரப் பிறப்புகளிலும் மீண்டும் பிறப்பதை ததாகதர் தம் பூரண ஞானப் பார்வையினால் பார்க்க முடியும்."***

***"சரியான கருத்துகளின் காரணமாக, சான்றோர் அருளிய தர்ம உபதேசங்களைப் போற்றி, எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் நல்லனவற்றைச் செய்தோர் உடலைவிட்டு உயிர் பிரிந்தபின், தெய்வலோகத்தில் பிறந்து இன்புறுவதையும் ததாகதர் தம் பூரண ஞானப் பார்வையால் பார்க்க முடியும்."***

பகவான் புத்தர் இப்படியும் கூறியுள்ளார்:

***“உண்மையில், வினைப் பயன் உண்டாகையால்; மறுபிறப்பு உண்டாகையால்; வினைப்பயன் இல்லை, மறுபிறப்பு இல்லை என்ற கருத்து ஒருவரின் பொய்யான கருத்து ஆகும்.****

***"உண்மையில், வினைப் பயன் உண்டாகையால்; மறுபிறப்பு உண்டாகையால், வினைப்பயன் இல்லை, மறுபிறப்பு இல்லை என்ற எண்ணம் ஒருவரின் பொய்யான எண்ணம் ஆகும்.***

***"உண்மையில், வினைப் பயன் உண்டாகையால், மறுபிறப்பு உண்டாகையால்; வினைப்பயன் இல்லை, மறுபிறப்பு இல்லை என்ற பேச்சு ஒருவரின் பொய்யான பேச்சு ஆகும்."***

பகவான் புத்தர் இப்படியும் கூறியுள்ளார்:

> ***"பூரண ஞானம் பெற்ற அன்றிலிருந்து, மகா பரிநிர்வாண முக்தி அடையும் நாள்வரை, ததாகதர் உபதேசம் செய்தவை யாவும் உண்மையே; உண்மையைத் தவிர வேறில்லை. ஆகவே, அவர் ததாகதர்."***

(பகவான் புத்தர் தம்மை, "ததாகதர்" என அழைப்பார். "ததாகதர்" என்பதற்கு இவ்வாறு பொருள் கொள்ளலாம்: வழிகாட்ட வந்தவர்; பாதை அமைக்க வந்தவர்; மனிதர்களுக்கும் தெய்வங்களுக்கும் உபதேசம் செய்ய வந்தவர்)

சாதாரண மணிதர்களுக்கு இல்லாத பூரண ஞானப் பார்வை தமக்கு உண்டென்றும், தாம் தம் பூரணஞானப் பார்வையினால் உயிர்கள் இறந்து மீண்டும் பிறப்பதைக் காண முடியும் என்றும்; மறு பிறப்பு உண்டு என்றும் பகவான் புத்தர் கூறுகின்றார்.

---

## *3. நாம் எண்ணிக்கையற்ற பிறப்புகளை எடுத்துள்ளோம்.*

நம் வாழ்வு இப்பிறப்பில் ஆரம்பிக்க வில்லை என்றும்; இப்பிறப்பிற்கு முன் நாம் பல முற்பிறப்புகளை எடுத்துள்ளோம் என்றும் சான்றோர் கூறியுள்ளனர்.

நாம் ஒவ்வொருவரும் எண்ணிக்கை இல்லா முற்பிறப்புகளை எடுத்துள்ளோம் என்பதையும் நாம் எடுத்துள்ள பிறப்புகளின் எண்ணிக்கையை நிர்ணயிக்க முடியாது என்பதையும் விளக்குவதற்காக, தம் சிஷ்யர்களிடம் பகவான் புத்தர் இவ்வாறு கேட்டார்:

***"இந்த நீண்ட பயணத்தில் (பிறப்பு - இறப்பு எனும் பயணத்தில்) ஓடி வந்துள்ள நீங்கள், இதுவரை அருந்தியுள்ள தாயின் பால் அதிகமா, அல்லது நான்கு சமுத்திரங்களின் நீர் அதிகமா?"***

பிறகு அவர்களுக்கு இவ்வாறு பதில் கூறினார்:

***"உண்மையில் இந்த நீண்ட பயணத்தில் ஓடி வந்துள்ள நீங்கள், இதுவரை அருந்தியுள்ள தாயின் பால், நான்கு சமுத்திரங்களின் நீரைவிட அதிகம்."***

(விளக்கம்: ஒவ்வொரு தடவையும் பிறந்தபோது, நாம் தாயின் பாலை அருந்தியுள்ளோம். எத்தனை தடவை பிறந்திருந்தால், நாம் இதுவரை அருந்தியுள்ள தாயின் பால் நான்கு சமுத்திரங்களின் நீரைவிட அதிகமாயிருக்கும். அதாவது, பகவான் புத்தர் இந்த உவமையின் மூலம் நாம் எடுத்துள்ள பிறப்புகளின் எண்ணிக்கையை நிர்ணயிக்க முடியாது என விளக்குகிறார்.)

எண்ணிக்கையற்ற பிறப்புகளை எடுத்துள்ள நாம், துக்கத்தினாலும், துயரத்தினாலும் சிந்தியுள்ள கண்ணீர், நான்கு சமுத்திரங் களின் நீரைவிட அதிகம் என்பதைக் கீழ்க்கண்ட வாறு விளக்கியுள்ளார்:

***எது அதிகம்? இந்த நீண்ட பயணத்தில் ஓடி வந்துள்ள நீங்கள், துக்கத்தினால் சிந்தியுள்ள கண்ணீர் அதிகமா, அல்லது நான்கு சமுத்திரங்களின் நீர் அதிகமா?"***

***"உண்மையில், நீங்கள் சிந்தியுள்ள கண்ணீர், நான்கு சமுத்திரங்களின் நீரைவிட அதிகம்.***

***இந்த நீண்ட பயணத்தில் ஓடி வந்துள்ள நீங்கள், தாயை இழந்து, மகனை இழந்து, மகளை இழந்து, சுற்றத்தாரை இழந்து, பொருளை இழந்து, நோயினால் பெருந்துன் புற்று, சிந்தியுள்ள கண்ணீர் நான்கு சமுத்திரங்களின் நீரைவிட அதிகம்.***

(விளக்கம்: நாம் எத்தனை பிறப்புகள் எடுத்திருந்தால், இதுவரை

துக்கத்தினால், நாம் சிந்தியுள்ள கண்ணீர், நான்கு சமுத்திரங்களின் நீரைவிட அதிகமாக இருக்கும். 'இவ்வளவு என ஒரு எண்ணிக்கையை நிர்ணயிக்க முடியாது.)

மாறி மாறி வரும் பிறப்பு - இறப்பு எனும் நீண்ட பயணத்தில் ஓடி வந்துள்ள உயிர்களின் துக்கத்தை பகவான் புத்தர் இப்படியும் விளக்கியுள்ளார்:

*"எது" அதிகம்? இந்த நீண்ட பயணத்தில் ஓடி வந்துள்ள நீங்கள், உங்கள் தலைகளை இழந்து, அதன் காரணமாகச் சிந்தியுள்ள இரத்தம் அதிகமா அல்லது நான்கு சமுத்திரங்களின் நீர் அதிகமா?"*

*பல பிறப்புகளில் நீங்கள் எருதுகளாகப் பிறந்து , உங்கள் தலைகளை இழந்து, (கொல்லப்பட்டு இரத்தம் சிந்தியுள்ளீர்கள்; பல பிறப்புகளில் நீங்கள் எருமைகளாகப் பிறந்து, உங்கள் தலைகளை இழந்து, இரத்தம் சிந்தியுள்ளீர்கள்; பல பிறப்புகளில் நீங்கள் ஆடுகளாகப் பிறந்து, பன்றிகளாகப் பிறந்து, காட்டு விலங்குகளாகப் பிறந்து, கோழிகளாகவும், பறவைகளாகவும் பிறந்து, உங்கள் தலைகளை இழந்து இரத்தம் சிந்தியுள்ளீர்கள்."*

*"இந்த நீண்ட பயணத்தில் ஓடி வந்துள்ள நீங்கள், எருதுகளாகவும், எருமைகளாகவும், ஆடுகளாகவும், காட்டு விலங்குகளாகவும், கோழிகளாகவும், பறவைகளாகவும் பிறந்து, உங்கள் தலைகளை இழந்து, (கொல்லப்பட்டு) சிந்தியுள்ள இரத்தம், நான்கு சமுத்திரங்களின் நீரைவிட அதிகம்."*

இந்த உவமைகளின் மூலம் , நாம் எண்ணிக்கையற்ற பிறப்புகளை எடுத்துள்ளோம் என்றும்; நாம் எடுத்துள்ள பிறப்புகளின் எண்ணிக்கையை நிர்ணயிக்க முடியாது என்றும் பகவான் புத்தர் விளக்கியுள்ளார்.

நம் வாழ்க்கை எப்போது ஆரம்பித்தது? நம் பிறப்புகளின் முதல் ஆரம்பம் என்ன? நம் பிறப்பு எப்போது ஆரம்பித்தது என நம் பிறப்பின் முதல் ஆரம்பத்தை நாம் அறிய முடியுமா?

நாம் ஒவ்வொருவரும் எண்ணிக்கை அற்ற பிறப்புகளை எடுத்துள்ளோம் என்றும், நம் பிறப்புகளின் ஆரம்பத்தை அறிய முடியாது என்றும் பகவான் புத்தர் கீழ்க்கண்டவாறு விளக்கி உள்ளார்:

*இப்பயணத்தின் (மாறி மாறி வரும் பிறப்பு - இறப்பு எனும் பயணத்தின் முதல் ஆரம்பத்தைக் காண முடியாது. அவாவில் சிக்குண்டு, அறியாமையில் மயங்கி ஓடி வரும் உயிர்களின் பிறப்பு - இறப்பு எனும் இப்பயணத்தின் முதல் ஆரம்பத்தைக் காண முடியாது."*

நம் பிறப்புகளின் முதல் ஆரம்பத்தைக் காண முடியாது என்கிறார் பகவான் புத்தர். ஏன்? பல யுகங்கள் வந்து போய்விட்டன. பல யுகங்கள் இந்தப் பயணத்தில் நாம் ஓடி வந்துள்ளோம். இன்னும் இப்பயணத்தில் நாம் ஓடிக்கொண்டுதான் இருக்கிறோம்.

எத்தனை யுகங்கள் வந்து போய் விட்டன? ஓர் உவமையின் மூலம் பகவான் புத்தர் இதை விளக்கியுள்ளார்.

ஒருமுறை ஒரு பிராமணர் பகவான் புத்தரிடம் இப்படிக் கேட்டார்:

"பகவான், எத்தனை யுகங்கள் வந்து போய் விட்டன?"

*"பிராமணரே, பல யுகங்கள் வந்து போய்விட்டன. இத்தனை நூறு யுகங்கள், இத்தனை ஆயிரம் யுகங்கள், இத்தனை லட்சம் யுகங்கள் என்று வந்து போன யுகங்களைக் கணக்கிட முடியாது."*

"பகவான் ஓர் உவமையின் மூலம் அதை விளக்க முடியுமா?"

*"முடியும் பிராமணரே. கங்கை நதி ஆரம்பிக்கும் இடத்தையும், அது கடலை அடையும் இடத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டு இடங்களுக்கும் இடையில் உள்ள மணலை எண்ண முடியாது; அதாவது, இத்தனை நூறு மணல்கள்; இத்தனை ஆயிரம் மணல்கள், இத்தனை லட்சம் மணல்கள் என எண்ண முடியாது. இதைவிட அதிக யுகங்கள் வந்து போய்விட்டன." (கடந்து சென்றுவிட்டன)*

*"அவற்றை எண்ணமுடியாது; இத்தனை நூறு யுகங்கள்; இத்தனை ஆயிரம் யுகங்கள், இத்தனை லட்சம் யுகங்கள் என வந்து போன யுகங்களை எண்ண முடியாது."*

எண்ணிக்கையில்லா யுகங்கள் பிறப்பு - இறப்பு எனும் சக்கரத்தில் நாம் சுழன்று வந்துள்ளோம் என்பதால், நாம் எடுத்துள்ள பிறப்புகளின் எண்ணிக்கையை நிர்ணயிக்க முடியாது; நம் பிறப்புகளின் முதல் ஆரம்பத்தையும் நாம் காண முடியாது.

---

## *4. ஆறு வகை பிறப்புகள்.*

பிறப்புகளில் ஆறு வகை உண்டு எனப் பகவான் புத்தர் கூறியுள்ளார். அவை: தெய்வலோகப் பிறப்பு, மானிடப் பிறப்பு, மிருகப் பிறப்பு, பேய்ப் பிறப்பு, அசுர வேதாளப் பிறப்பு , நரகலோகப் பிறப்பு ஆகியவை. இந்த ஆறு வகையான பிறப்புகளை ஆறு உலகங்கள் என்று கூறுவதும் உண்டு. இந்த ஆறு உலகங்களிலும், தத்தம் கர்ம பலனுக்கு ஏற்றவாறு, உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறந்து இறப்பார்கள்.

இந்த ஆற உலகங்களில் இரு உலகங்களை மட்டுமே மனிதர்களால் காணமுடியும். அதாவது மானிட உலகையும், மிருக உலகையும் மட்டுமே மனிதர்கள் காண முடியும், தெய்வலோகமும், பேய் உலகமும், அசுர வேதாள உலகமும், நரக லோகமும் மனிதப் புலன்களுக்குத் தென்படுவதில்லை.

ஆறு வகைப் பிறப்புகள்

*தெய்வலோகப் பிறப்பு*

*மானிடப் பிறப்பு*

*மிருகப் பிறப்பு*

*பேய்ப் பிறப்பு*

*அசுர வேதாளப் பிறப்பு*

*நரகலோகப் பிறப்பு*

எந்த உலகில் உயிர்களுக்குப் பிறப்பு அமையும் என்பதை, உயிர்களின் கர்ம பலனே நிர்ணயிக்கும். அதாவது, மானிட வாழ்வு வாழ்ந்த ஓர் உயிர், இறந்த பின், மீண்டும் எவ்வுலகில் பிறக்கும் என்பதை, அவ்வுயிரின் கர்ம பலனே நிர்ணயிக்கும்.

தெய்வலோகப் பிறப்புகளும், மானிடப் பிறப்பும் நல்ல பிறப்பு என்றும்; மற்ற நான்கு கீழ் பிறப்புகளும் துன்பப் பிறப்புகள் என்றும் பெரியோர்கள் கூறுவர்.

தெய்வலோகங்கள் இன்பமயமானவை. இங்கு இன்பமே மிகுந்திருக்கும். நன்னெறிகளில் ஒழுகி, நற்கருமங்களைச் செய்தோர், இங்கு பிறப்பார்கள். அதாவது, மானிடப் பிறப்பில், நன்னெறிகளில் ஒழுகி, புண்ணிய கருமங்களைச் செய்தோர், தாம் செய்த புண்ணியங்களின் இன்ப பலனை அனுபவிக்கும் பிறப்பு இது.

மானிடப் பிறப்பு இன்பம் துன்பம் இரண்டும் கூடியது. இங்கு இன்பமும் உண்டு, துன்பமும் உண்டு. மானிட உலகில் இன்பம் துன்பம் இரண்டும் சம அளவில் உண்டு எனக்கூறலாம்.

இங்கு புண்ணியமும் உண்டு, பாவமும்உண்டு; நல்லவையும் உண்டு, தீயவையும் உண்டு; அவற்றுக்கு ஏற்ற பலனும் உண்டு, மானிடப் பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சி, நன்னெறியில் ஒழுகி, நல்வழியில் நடப்போர், இங்கும் சுகம் பெறுவார்கள். உடலை விட்டு உயிர் பிரிந்த பின், மறு பிறப்பில் தெய்வலோகங்களில் பிறந்து சுகம் பெறுவார்கள். ஆகவே, இங்கிருந்து தெய்வலோகம் போகலாம்.

அல்லது,

பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சாமல், நன்னெறிகளை அலட்சிப் படுத்தி, பாவ கருமங்களைச் செய்தோர், பாவ கருமங்களைச் செய்ததன் காரணமாக, இங்கும் துன்பப்பட்டு, உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், மறுபிறப்பில், மிருகமாகவோ, பேயாகவோ, அசுர வேதாளமாகவோ, நரகத்திலோ பிறந்து துன்புறுவார்கள். ஆகவே மானிடப் பிறப்பிலிருந்து, துன்பப் பிறப்புகளிலும் விழலாம்.

அல்லது,

பற்றுகளை அறுத்து , அவாவை அழித்து, பேதமை அகற்றி, மாறி மாறி வரும் பிறப்பு - இறப்புகளிலிருந்து விடுபட்டு, மோட்சம் அடையலாம். இத்தகையோர், மீண்டும் எவ்வுலகிலும் பிறப்பதில்லை. ஆகவே, மானிடப் பிறப்பிலிருந்து, மாறி - மாறி வரும் பிறப்பு - இறப்புகளிலிருந்து விடுபடலாம்.

மிருகப் பிறப்பு, பேய்ப்பிறப்பு, அசுரவேதாளப் பிறப்பு, நரகலோகப் பிறப்பு, இவை நான்கும் துன்பப் பிறப்புகள். இங்கு துன்பமும் வேதனையுமே மிகுந்திருக்கும். மானிடப் பிறப்பில், சான்றோர் அருளிய தர்ம உபதேசங்களை அலட்சியப்படுத்தி, பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சாமல், தீய கருமங்களைச் செய்வோர், உடலை விட்டு உயிர் பிரிந்தபின், இத்துன்ப உலகங்களில் மீண்டும் பிறந்து, தம் பாவ கருமங்களின் துன்பப் பலன்களை அனுபவிப்பார்கள் எனப் பெரியோர் கூறியுள்ளார்கள். ஆகவே, இவை நான்கும் பாவ கருமங்களின் துன்பப் பலனை அனுபவிக்கும் பிறப்புகள்.

இந்த நான்கு உலகங்களிலும் தர்ம உபதேசம் பிரகடனம் செய்யப்படுவதில்லை. இங்கு பிறக்கும் உயிர்களுக்குத் தர்ம உபதேசத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லை.

உதாரணத்திற்கு, மிருக உலகை எடுத்துக் கொள்வோம்:

ஞான அறிவு பெற்ற ஒரு நாய், மற்ற நாய்களுக்கு உபதேசம் செய்வதை நாம் காண்பதில்லை; ஞான அறிவு பெற்ற ஒரு கழுதை மற்றக் கழுதைகளுக்கு உபதேசம் செய்வதை நாம் காண்பதில்லை; ஞான அறிவு பெற்ற ஒரு பறவை மற்றப் பறவைகளுக்கு உபதேசம் செய்வதை நாம் காண்பதில்லை. ஏன்? விலங்குகளுக்கு தர்ம உபதேசத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இல்லை.

பாவத்தைப் பாவம் என அறிந்து, புண்ணியத்தைப் புண்ணியம் என அறிந்து, பாவத்திற்கு அஞ்சி, நல்வாழ்வு வாழும் மிருகங்களை நாம் காண முடியாது. ஏன்? மிருகங்களுக்கு அந்த ஆற்றல் இல்லை.

இது ஒன்றையொன்று அழித்துத் தின்னும் உலகம். மிருகங்கள் தத்தம் பிறப்பிற்கேற்ப வாழ்ந்து இறந்துவிடும்.

மானிடப் பிறப்பிலிருந்து மிருகப் பிறப்பிற்குள் விழுந்த உயிர்கள், தம் தீய கரும பலனை அனுபவித்த பின், மானிடப் பிறப்பில் தாம் செய்துள்ள சில நற்செயல்களின் காரணமாக, மீண்டும் மானிட உலகில் பிறப்பார்கள்.

ஆனால், மிருகப் பிறப்பிலிருந்து நல்ல பிறப்புகளுக்குப் போவது மிக மிகக் கடினம். ஏன்? இங்கு தர்ம உபதேசங்களைக் கேட்பதற்கும், நன்னெறிகளை அறிந்து நல்வாழ்வு வாழ்வதற்கும் வாய்ப்பில்லை.

பேய் உலகிலும், அசுர வேதாள உலகிலும், நரகலோகத்திலும் பிறக்கும் உயிர்களுக்குப் புனித தர்ம உபதேசங்களில் நம்பிக்கை இருக்காது. ஏன்?

இந்த உலகங்களில் பிறப்போர், தங்களுடைய முன்னாள் மானிடப் பிறப்பில், புனித தர்ம உபதேசங்களை அலட்சியம் செய்து, உதாசீனப்படுத்தியவர்கள்; பழித்து இகழ்ந்தவர்கள்; பாவத்தில் மகிழ்ந்தவர்கள், பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சாமல் பாவ கருமங்களைச் செய்தவர்கள், நல்லோரையும், நல்லோரின் நல்லொழுக் க நெறிகளையும் வெறுத்தவர்கள். அதன் காரணமாக இப்போது இவ்வுலகங்களில் பிறந்துள்ளார்கள்.

இவ்வுலகங்களில் பிறந்தோர், முற்பிறப்புகளில் பாவ கருமங்களைச் செய்து உள்ளதால், அதன் காரணமாக, இப்போது இவர்களிடம் கொடிய சுபாவமும், தீய குணங்களும் அவ நம்பிக்கையும் மிகுந்திருக்கும்.

இவர்களுக்குப் புனித தர்மத்தை உபதேசம் செய்தால், இவர்கள் அதை நம்பமாட்டார்கள், இவர்கள் உள்ளத்தில் பக்தி எழாது. மாறாக, இவர்கள் மனத்தில் கொடிய எண்ணங்கள் எழும்; வெறுப்பும், சினமும், பகைமையும், அவநம்பிக்கையும் எழும், மனத்தில் எழும் கொடிய

எண்ணங்களால் உந்தப்பட்டு, நலம் தரும் நல்லுபதேசங்களை அலட்சியப் படுத்தி, உதாசீனம் செய்வார்கள்.

இதன் காரணமாக பேய் உலகிலும், அசுர வேதாள உலகிலும், நரகலோகத்திலும் தர்ம உபதேசங்கள் பிரகடனம் செய்யப் படுவதில்லை.

மானிடப் பிறப்பிலிருந்து இத்துன்பப் பிறப்புகளுக்குள் விழுந்த உயிர்கள், தம் தீய கரும பலனை அனுபவித்த பின், மானிடப் பிறப்பில் தாம் செய்துள்ள நற்செயல்களின் காரணமாக, மீண்டும் மானிட உலகில் பிறப்பார்கள்.

ஆனால், இந்தத் துன்பப் பிறப்புகளில் இருந்து நல்ல பிறப்புகளுக்குப் போவது மிக மிகக் கடினம். ஏன்? இவ்வுலகங்களில் புனித தர்ம உபதேசங்களைக் கேட்பதற்கும், நன்னெறிகளை அறிந்து நல்வாழ்வு வாழ்வதற்கும் வாய்ப்பில்லை.

ஆறு வகைப் பிறப்புகளில், மானிடப் பிறப்பே சிறந்தது எனப் பெரியோர்கள் கூறியுள்ளார்கள். ஏன்?

மானிட உலகில் பிறக்கும் உயிர்களுக்கு, தர்ம உபதேசங்களைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் உண்டு. அதன் காரணமாக மானிட உலகில் தர்ம உபதேசம் பிரகடனம் செய்யப்படுகிறது.

இங்கு பிறக்கும் உயிர்கள் தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்டு, உள்ளத்தில் பக்தியை வளர்த்து, நன்னெறிகளை அறிந்து, நல்வழியில் நடந்து, தெய்வலோகம் போகலாம். மற்றும் இங்கிருந்து, பிறவிப் பெருங்கடலைக் கடந்து, மோட்சம் பெறலாம்.

மானிட உலகிற்குக் கீழுள்ள நான்கு துன்பப் பிறப்புகளில், தர்ம உபதேசங்களைக் கேட்பதற்கும், நன்னெறிகளை அறிந்து நல்வாழ்வு வாழ்வதற்கும் பிறவிப் பெருங்கடலைக் கடந்து மோட்சமடைவதற்கும் வாய்ப்பில்லை.

மானிட உலகிற்கு மேலுள்ள தெய்வலோகங்கள் இன்பமயமானவை. இங்கு துன்பமும் துயரமும் இல்லை. துன்பத்தை அறியாத

இவர்களுக்கு, துயரத்தை அறியாத இவர்களுக்கு, தெய்வலோக இன்பங்களில் மயங்கி வாழும் இவர்களுக்கு, மோட்சம் கவர்ச்சியாகத் தோன்றுவதில்லை. அதன் காரணமாக, இங்கிருந்து மோட்சம் பெறுவது சாத்தியமாகாது.

மானிடப் பிறப்பில் நல்வாழ்வு வாழ்ந்து தெய்வலோகம் போகலாம்; பற்றுகளை அறுத்து, மாறி மாறி வரும் பிறப்பு - இறப்பு இவற்றிலிருந்து விடுபட்டு, மோட்சம் பெறலாம். இதன் காரணமாக, தெய்வலோகப் பிறப்பைவிட மானிடப் பிறப்பே சிறந்தது எனப் பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

---

## 5. மானிட உலகில் ஏன் தர்ம உபதேசம் பிரகடனம் செய்யப்படுகிறது.

மானிட உயிர்களுக்கு (மனிதர்களுக்கு) நன்மை - தீமை இவற்றைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் உண்டு; பாவம் - புண்ணியம் இவற்றைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் உண்டு. அதன் காரணமாக மனிதர்களுக்குத் தர்ம உபதேசங்களின்(நன்னெறிகளின்) பொருள் விளங்கும்.

மானிட உலகில், உயிர்கள் தத்தம் செயல்களின் பலனை அனுபவிப்பதைக் காணலாம். அதாவது, தீய கருமங்களைச் செய்தோர் பின்னால் துன்புற்று வருந்துவதையும்; நற்கருமங்களைச் செய்தோர் பின்னால் இன்புற்றுச் சுகம் பெறுவதையும் இங்குக் காணலாம். இவற்றை இங்குக் காணலாம் என்பதால், தீய செயல்கள் பின்னால் துன்பம் தரும்; நற்செயல்கள் பின்னால் சுகம் தரும் எனச் செயல்களின் பிற்பயனை மானிடப் பிறப்பில் உயிர்கள் புரிந்து கொள்வார்கள். அதன் காரணமாக மனிதர்களுக்குத் தர்ம உபதேசங்களின் பொருள் விளங்கும்.

நன்மை - தீமை, பாவம் புண்ணியம்; நல்வினை - தீவினை; வினைப் பயன் இவற்றைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் மானிட உயிர்களுக்கு உண்டென்பதால், சான்றோர்கள் மானிட உலகில் தோன்றி, தர்ம உபதேசங்களைப் பிரகடனம் செய்துள்ளார்கள்.

இவற்றைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் மானிட உயிர்களுக்கு உண்டு என்ற போதிலும், தர்ம உபதேசங்களைக் கற்காத வரை, பாவம் எது, புண்ணியம் எது; நல்வினை எது, தீவினை எது; நன்னெறிகள் எவை என்பது மனிதர்களுக்கு விளங்காது.

உதாரணத்திற்கு, மிருகங்களுக்குப் பாவம் - புண்ணியம் , நல்வினை - தீவினை இவற்றைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லை என்பதால், அவற்றுக்குத் தர்ம உபதேசங்களின் பொருள் விளங்காது.

ஆனால், மனிதர்களுக்குப் பாவம் - புண்ணியம், நல்வினை தீவினை இவற்றைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் உண்டு. புரிந்து கொள்ளும் ஆற்றல் உண்டு என்ற போதிலும், தர்ம உபதேசங்களைக் (நன்னெறிகளை) கற்காத வரை மனிதர்களுக்கும் பாவம் எது, புண்ணியம் எது, நல்வினை எது, , தீவினை எது என்பது விளங்குவதில்லை. எப்போது தர்ம உபதேசங்களைக் கற்கின்றார்களோ, அப்போதுதான் மனிதர்களுக்கும் இவை விளங்கும்.

ஆகவே, சான்றோர் அருளிய தர்ம உபதேசங்களைக் கல்லாதோர் நன்னெறிகளை அறிவதில்லை; பாவம் - புண்ணியம் ஆகியவற்றையும் அறிவதில்லை; நல்வினை - தீவினைகளை அறிவதில்லை.

இவர்களில் சிலர் தர்ம உபதேசங்களைப் பழித்து இகழ்வார்கள், அலட்சியப்படுத்திப் புறக்கணிப்பார்கள். பாவம் இல்லை, புண்ணியம் இல்லை, செயல்களுக்குப் பிற்பயன் இல்லை, மறு உலகம் இல்லை, மறு உலகில் எவரும் தம் செயல்களின் பலனை அனுபவிப்பதில்லை என்பார்கள்,

இவர்கள் செய்யத் தகாத பாவம் எதுவும் இல்லை. இத்தகையோர் உடல் அமைப்பால்தான் மானிடரே தவிர, விலங்குகளுக்கும் இவர்களுக்கும் வெகுதூரம் இல்லை. இத்தகையோர், தவறான கொள்கைகளைப் பின்பற்றி, பாவ கருமங்களைச் செய்து, உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், மிருகமாகவோ, பேயாகவோ, அசுர வேதாளமாகவோ, நரகத்திலோ பிறந்து துன்புறுவார்கள்.

இவர்களில் சிலர், “அடுத்த பிறப்பில் நான் மிருகமாகப் பிறந்தால், அந்த மிருகத்திற்கு இப்போதைய நான்தான் மிருகமாய்ப் பிறந்துள்ளேன் எனத் தெரியப் போகின்றதா? பிறகு ஏன் அடுத்த பிறப்பைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்” என்பார்கள். இவர்கள் எத்தகைய பரிதாபத்திற்குரிய மக்கள் ?

இவர்களின் விதியை பகவான் புத்தர் இவ்வாறு விளக்கியுள்ளார்: ஒருமுறை பகவான் புத்தர் தம் சிஷ்யர்களிடம் இப்படிக் கேட்டார்:

*பகவான் புத்தர் :*

*"மரத்தினால் செய்யப்பட்ட, துவாரம் உள்ள ஒரு வடிவத்தை (நுகத்தடியை) ஒரு மனிதர் கடலில் வீசுவதாக எண்ணிக் கொள்ளுங்கள். அது காற்றாலும், அலைகளாலும் அங்குமிங்கும் தள்ளப்பட்டுக் கடலில் மிதந்து செல்லும். கடலில் உள்ள ஒரு குருட்டு ஆமை, நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை தன் தலையைக் கடலுக்கு மேல் தூக்குவதாக எண்ணிக் கொள்ளுங்கள். அந்தக் குருட்டு ஆமை கடலில் மிதந்து செல்லும் வடிவத்தில் உள்ள துவாரத்தினுள் தன் தலையை நுழைக்க முடியுமா?"*

(விளக்கம்: வடிவத்தில் உள்ள துவாரமோ சிறியது; கடலோ மிகப் பெரியது. ஆமையோ குருடு. நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அது தன் தலையைக் கடலுக்கு மேல் தூக்குகிறது. அது தன் தலையை வடிவத்தில் உள்ள துவாரத்தினுள் நுழைக்க முடியுமா? கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை தன் தலையைக் கடலுக்கு மேல் தூக்கும் ஒரு குருட்டு ஆமை, எப்போது தன் தலையை வடிவத்தில் உள்ள துவாரத்தில் நுழைக்க முடியும்? அப்படியே இது நடந்தாலும் எவ்வளவு காலமாகும்!)

சிஷ்யர்கள் :

*"பகவான், நீண்ட காலத்திற்குப் பின் இது நடைபெறலாம்."*

பகவான் புத்தர்:

*"இப்போது நான் உங்களுக்கு அறிவிக்கின்றேன். கீழ்ப்பிறப்புகளில் விழுந்த அறிவிலி ஒருவன், மீண்டும் மனித நிலைக்கு (பிறப்பிற்கு) வருவதற்கு இதைவிட அதிக காலமாகும். இதன் காரணம் என்ன?"*

*"கீழ் உலகங்களில், தெய்வீக வாழ்வு இல்லை; நீதி நெறிகளுக்கு ஏற்ற வாழ்வு இல்லை; இங்கு நற்செயல்கள் செய்யப் படுவதில்லை; இங்கு புண்ணிய கருமங்கள் செய்யப்படுவதில்லை. இது பலமுடையோர் பலமற்றோரை வருத்தும் உலகம்; ஒன்றையொன்று கொன்று தின்னும் உலகம்."*

ஆகவே, சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களைப் பழித்து இகழ்ந்து, பாவம் இல்லை, புண்ணியம் இல்லை, மரணத்திற்கு அப்பால் வேறு வாழ்வு இல்லை; மறு உலகம் இல்லை; மறு உலகில் உயிர்கள் தம் செயல்களின் பலனை அனுபவிப்பதில்லை போன்ற தவறான கருத்துகளைப் பின்பற்றி, பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சாமல் பாவ கருமங்களைச் செய்வோர், பகவான் புத்தரின் இந்த எச்சரிக்கையைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

---

## *6. தர்ம உபதேசத்தை மனமுவந்து ஏற்போர் சிலரே.*

இறைவன் அருளால் பூரண ஞானம் பெற்ற சான்றோர், தங்கள் ஞான அறிவினால் அறிந்த சத்திய உண்மைகளை, தர்ம உபதேசத்தின் மூலம் இவ்வுலகிற்குக் கூறும்போது, மனம் மகிழ்ந்து ஏற்றுக் கொள்வோர் சிலரே.

மனித குலத்தின் நன்மைக்காக இவ்வுபதேசம் வழங்கப்பட்ட போதிலும், மனிதர்களில் பெருமபான்மையோர் இவ்வுபதேசங்களை ஏற்பதில்லை. இவ்வுபதேசங்களில் அவநம்பிக்கை கொண்டு,

உதாசீனப்படுத்தி, இகழ்ந்து உரைப்போரும், அப்படியே ஏற்றாலும், தர்ம உபதேசங்களை முறையாகக் கற்று அதில் ஒழுகாமல், குழப்பத்தில் வாழ்வோருமே அதிகம்.

இவை, பகுத்தறிவிற்கு எட்டாதவை என்பதை அறியாமல், பூரண ஞான அறிவிற்கே விளங்கும் சத்திய உண்மைகள் என்பதையும் அறியாமல், தன் சுய புத்திக்கு விளங்கவில்லை என்ற காரணத்தால், கல்வி அறிவு பெற்றோரும், தர்ம உபதேசத்தில் அவநம்பிக்கை கொண்டு, இகழ்ந்து உரைப்பார்கள். பிறப்பினால் ஏற்படும் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளைக் கூறுவதே தர்ம உபதேசம் என்பதையும் பலர் அறிவதில்லை.

இருளில் பாதை தெரியாமல் தடுமாறும் ஒருவருக்கு, விளக்கேற்றிப் பாதையைக் காண்பிப்பது போல், அறியாமை என்னும் இருளில் மூழ்கி, பிறப்பு - இறப்பு என்னும் பெருங்கடலில் திசை தெரியாமல் தத்தளிக்கும் உயிர்களுக்கு, பிறப்பினால் ஏற்படும் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு உரிய வழிமுறைகளே தர்ம உபதேசம் என்பதை அறிவுடையோர் உணர வேண்டும்.

தன் சுய புத்திக்கு விளங்கவில்லை என்பதால் தர்ம உபதேசம் கூறும் சத்திய உண்மைகள் பொய்யாகிவிடாது. இவை யாவும் சுயபுத்திக்கு எட்டாத சத்திய உண்மைகள் என்பதைப் புரிந்து கொள்வதே அறிவுடைமை.

சுய புத்திக்கு விளங்கவில்லை என்பதால், அறவிதிகளும், வினைப்பயன்களும், அடுத்த உலகங்களும் பொய் ஆவதில்லை. இவற்றைப் பொய் என்று இகழ்ந்து உரைத்தோர், பெருமை அடைந்ததுமில்லை. நம்பி வாழ்ந்தோர் கெட்டதுமில்லை.

தர்ம உபதேசத்தை அவநம்பிக்கை கொண்டு, இகழ்ந்துரைத்து உதாசீனம் செய்தோர், கெட்டழிந்தது சரித்திரம் கூறும் உண்மை. தர்ம உபதேசத்தை மனமகிழ்ந்து ஏற்று முறையாகக் கற்று, அதில் ஒழுகினோர், மேன்மையும் புகழும் அடைந்ததும் சரித்திரம் கூறும் உண்மை.

நம்பினோரும், நம்பாதோரும், எவராலும் அறவிதிகளிலிருந்தும், வினைப் பயன்களில் இருந்தும், அடுத்த உலகங்களில் இருந்தும் தப்ப முடியாது. நம்பினோரும் தர்ம உபதேசத்தை முறையாகக் கற்று, பொருள் அறிந்து, அதில் ஒழுகினால் ஒழிய, பிறப்பினால் ஏற்படும் துன்பங்களிலிருந்து

விடுபட முடியாது.

அறியாமையும் குழப்பங்களும் இவர்கள் மனத்தை விட்டு அகலாது. "நான் நம்பிக்கை உள்ளவன்" என ஒருவன் சொன்ன போதிலும், தர்ம உபதேசத்தை அவன் முறையாகக் கற்காமல், அதன் பொருளை விளங்கிக் கொள்ளாமல், குழப்பத்தில் இருப்பானாயின், இவனுக்கும் நம்பிக்கை அற்றவனுக்கும் என்ன வித்தியாசம்?

வலையில் சிக்கிய பறவைகளில் ஒரு சிலவே தப்பித்துப் போவது போல், மனிதர்களில் சிலரே தர்ம உபதேசத்தை மனமகிழ்ந்து ஏற்று, முறையாகக் கற்று, பொருள் விளங்கி, அதில் ஒழுகி , பிறப்பினால் ஏற்படும் துன்பங்களிலிருந்து விடுபட்டு, சொர்க்கத்தையும் மோட்சத்தையும் அடைகின்றனர். இருளிலிருந்து விடுபட்டு வெளிச்சத்தை அடைகின்றனர்.

இதை விளக்கும் பொருட்டு பகவான் புத்தர் இவ்வாறு உபதேசம் செய்துள்ளார்:

*இப்பூமியில் எவ்வாறு, அழகிய பூங்காக்களும், அழகிய சோலைகளும், குளங்கள் உள்ள அழகிய நிலங்களும் எண்ணிக்கையில் மிகவும் குறைவாக வும்; செங்குத்தான இடங்களும், நடந்து கடக்க முடியாத நதிகளும், காடுகளும் , அடர்ந்த முள்புதர்களும், மலைப் பிரதேசங்களும் எண்ணிக்கையில் மிக அதிகமாகவும் காணப்படுகின்றனவோ, அது போல,*

*உயிரினங்களில் இறந்து, மறுபிறப்பில் மானிடப் பிறப்பைப் பெறுவோர் மிகக் குறைவே, உயிரினங்களில் இறந்து மறுபிறப்பில் மிருகங்களாகவும், பேயாகவும், நரகத்திலும் பிறப்போரே மிக அதிகம்.*

*அறிவும், புத்திக் கூர்மையும், , பிறர் பேசும் சொற்களில் உள்ள நன்மை தீமைகளை ஆராய்ந்து அறியும் வல்லமையும் உடையோர் மிகக் குறைவே; அறிவிலாரும், மந்த புத்திக்காரர்களும், பிறர் பேசும் சொற்களில் நன்மை தீமைகளை அறியும் வல்லமையற்றோரே மிக அதிகம்.*

*சத்திய உண்மைகளை அறியும் அறிவுக் கண் உடையோர் வெகு சிலரே; அறியாமையிலும், குழப்பத்திலும் மூழ்கி இருப்போரே மிக அதிகம்.*

*ததாகததரைச் (பகவான் புத்தரை) சந்திக்கும் வாய்ப்பு பெறுவோர் மிகச் சிலரே; ததாகததரைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெறாதோரே மிக அதிகம்.*

*ததாகதர் அருளிய தர்ம உபதேசத்தைக் கேட்கும் போது மனமகிழ்ந்து ஏற்றுக் கொள்வோர் மிகக்குறைவே; அதில் அவ நம்பிக்கை கொண்டு உதாசீனப் படுத்துவோரே மிக அதிகம்.*

*ததாகதர் அருளிய தர்ம உபதேசத்தை, கல்வி கேள்வியால் கற்போர் மிகக்குறைவே; அவ்வாறு கல்லாதோரே மிக அதிகம்.*

*ததாகதர் அருளிய தர்ம உபதேசத்தைக் கல்வி கேள்விகளால் கற்று, அதன் பொருளைச் சிந்தித்து அறிந்து அதில் ஒழுகுவோர் மிகக் குறைவே.*

*ததாகதர் அருளிய தர்ம உபதேசத்தின் பொருள் விளங்கி, அறியாமையில் இருந்து விடுபட்டு சொர்க்கத்தையும், மோட்சத்தையும் அடைவோர் வெகு சிலரே. அறியாமையில் மூழ்கி குழப்பத்தில் உழல்வோரே மிக அதிகம்.*

பகவான் புத்தர் இவ்வாறும் கூறியுள்ளார்:

*ததாகதர் தோன்றுதல், இவ்வுலகில் பெரும் ஒளி தோன்றுவது போல்; பெரும் வெளிச்சம் தோன்றுவது போல், அவர் தோன்றுவது மிக அபூர்வம். அவர் தோற்றத்தால் இவ்வுலகம் நன்மை பெறும். அவர் தோற்றத்தால் பலர் நன்மை பெறுவார்கள். இவ்வுலகின் மீது இரக்கங்கொண்டு, இவ்வுலக மக்களின் நன்மைக்காகவும், தெய்வங்களின் நன்மைக் காகவும் ததாகதர் இவ்வுலகில் தோன்றுகிறார்.*

ஆகவே, எவரொருவர் , தர்ம உபதேசத்தை மனமகிழ்ந்து ஏற்று,

கல்வி கேள்வியால் கற்று, அதன் பொருளைச் சிந்தித்து அறிந்து, அதன் படி ஒழுகுகின்றாரோ, அவர் தனக்குத் தானே நன்மை செய்து கொள்வார். இவரே, அறியாமை என்னும் இருளிலிருந்து விடுபட்டு வெளிச்சத்தை அடைவார். இதுவே கிடைப்பதற்கரிய மானிடப் பிறப்பில் மனிதர்களுக்குக் கிடைக்கும் பெரும் பாக்கியம்.

------------------------------------------------

## *7. மானிட வாழ்க்கை.*

ஆறு வகை பிறப்புகளையும், பிறவிப் பெருங்கடல் எனச் சான்றோர் கூறுவர். பிறவிப் பெருங்கடலைக் கடக்காதவரை, அதாவது, மோட்சம் பெறாதவரை, உயிர்கள் தத்தம் வினைப் பயனுக்கு ஏற்றவாறு இந்த ஆறு உலகங்களிலும் மீண்டும் மீண்டும் பிறந்து இறப்பார்கள்.

"எங்கெல்லாம் பிறப்பு உண்டோ, அங்கெல்லாம் இறப்பும் உண்டு" என பகவான் புத்தர் கூறியுள்ளார். ஆகவே, ஆறு உலகங்களிலும் பிறப்பு - இறப்பு இரண்டும் உண்டு.

"தெய்வலோகங்களில் பிறந்தோர் என்றென்றும் தெய்வலோகங்களில் வாழ்வர். என்றென்றும் தெய்வலோக இன்பங்களில் இன்புறுவர்" எனச் சிலர் நம்புவார்கள். இது தவறான கருத்து என பகவான் புத்தர் கூறியுள்ளார்.

மானிட வாழ்க்கையோடு ஒப்பிடும்போது, தெய்வலோக வாழ்வு மிகவும் நீண்டது. இங்குப் பிறக்கும் உயிர்கள், பல ஆயிரம் ஆண்டுகள், பல லட்சம் ஆண்டுகள்வரை வாழ்வார்கள்; சில தெய்வலோகங்களில், வாழ்க்கை பல கோடி ஆண்டுகள்வரை நீடிக்கும். நீண்ட வாழ்விற்கும் ஒரு முடிவு உண்டென்பதால், இவர்களையும் மரணம் தூக்கிச் செல்லும்.

மானிட வாழ்வில் நன்னெறிகளில் ஒழுகி, புண்ணிய கருமங்களைச் செய்த பலனால் தெய்வலோகங்களில் பிறந்த உயிர்கள், அவ்வாழ்வு முடிவுற்றதும், தெய்வலோகங்களுக்கும் கீழுள்ள பிறப்புகளில் விழுந்து விடுவார்கள்.

ஆகாயத்தில் எய்த அம்பு, எவ்வளவு மேலே எழுந்தாலும், மீண்டும் கீழே விழுந்து விடுவது போல், உயர்ந்த தெய்வலோகங்களில் பிறக்கும் உயிர்களும், தம் புண்ணிய பலனை அனுபவித்த பின், மீண்டும் கீழ்ப் பிறப்புகளில் விழுந்து விடுவார்கள். அதாவது, மானிட உலகிலோ அல்லது மானிட உலகிற்கும் கீழே உள்ள மற்ற நான்கு உலகங்களிலோ மீண்டும் பிறப்பார்கள்.

ஆகவே, தெய்வலோகங்களில் பிறந்தோர் நரகலோகத்தைக் கடந்து விட்டார்கள், இனி அவர்கள் நரகத்தில் பிறக்கப் போவதில்லை; அசுர வேதாள உலகத்தைக் கடந்துவிட்டார்கள், இனி அவர்கள் அசுர வேதாள உலகத்தில் பிறக்கப் போவதில்லை; பேய் உலகைக் கடந்து விட்டார்கள், இனி அவர்கள் பேய் உலகில் பிறக்கப் போவதில்லை: மிருக உலகைக் கடந்துவிட்டார்கள், இனி அவர்கள் மிருக உலகில் பிறக்கப் போவதில்லை என்பவை யாவும் தவறான கருத்துகள்.

உண்மையில், பிறவிப் பெருங் கடலைக் கடந்து மோட்சம் அடைந்தோரே, இனிமேலும் மீண்டும் பிறப்பதில்லை. பிறவாத நிலையை அடைந்துவிட்ட இவர்கள் இனிமேலும் பிறப்பதில்லை என்பதால், இவர்களுக்கு இனி இறப்பும் இல்லை.

இது தெய்வலோகங்களையும் கடந்த நிலை. இங்கு பிறப்பு - இறப்பு இரண்டுமில்லை . மானிடராய்ப் பிறந்தோர் அடையும் பெரும் பாக்கியம் இதுவே! மாறி மாறி வரும் பிறப்பு இறப்புகளிலிருந்தும், பிறப்பினால் ஏற்படும் துன்பங்களிலிருந்தும் விடுபட்ட இவர்களுக்கு, இனி துக்கமில்லை.

ஆனால், மானிடராய்ப் பிறந்த உயிர்களில், பெரும்பான்மையோர் இந்த பாக்கியத்தைப் பெறுவதில்லை. வலையிலிருந்து தப்பிய பறவை போல, ஏதோ சிலரே இப்பாக்கியத்தைப் பெறுவார்கள். மற்றவர்களெல்லாம் பிறப்பு இறப்பு எனும் சக்கரத்தில் சுழன்று வருவார்கள்.

மானிடர்களில் பெரும்பாலோருக்கு, பிறவிப் பெருங் கடலைக் கடத்தல் கவர்ச்சியாகத் தோன்றுவதில்லை, அவசியமாகவும் தோன்றுவ தில்லை. ஏன்?

"பற்றற்ற மனமே பிறப்பறுக்கும்" என்று சான்றோர் கூறியுள்ளனர். அதாவது , படைக்கப்பட்ட யாவும் அழிவடையும் என உணர்ந்து, இவ்வுலகப் பற்றுகளை எல்லாம் அறுக்க வேண்டும்; புலன் இன்பங்களைத் துறக்க வேண்டும். அவா அனைத்தையும் அழிக்க வேண்டும்; நல்வழியில் நடந்து மாசற்ற வாழ்வு வாழ வேண்டும்.

ஆனால் மனிதர்களோ, பற்றுகளை வளர்ப்பதையும், புலன் இன்பங்களில் மகிழ்வதையும், ஆசைகளைத் தேடுவதையும் வாழ்வு எனக் கொண்டுள்ளார்கள். வாழ்க்கை இன்பங்களைத் தேடுவதையே குறிக் கோளாகக் கொண்டு வாழும் இவர்களுக்கு, தன்னடக்கமும், நன்னெறிகளும், மாசற்ற வாழ்வும் கவர்ச்சியாகத் தோன்றுவதில்லை; இவை யாவும் வாழ்க்கை இன்பங்களுக்கு இடையூறுகள் எனக் கருதி புறக் கணிப்பார்கள்.

பற்றுகளை அறுக்க வேண்டும்; புலன் இன்பங்களைத் துறக்க வேண்டும்; அவாவை அழிக்க வேண்டும், என எண்ணும்போதே, இவர்கள் உள்ளம் அச்சத்தால் நடுங்கும்.

மற்றும், மறு உலகிலும், மறு பிறப்பிலும் நம்பிக்கை கொண்டு, "உடலை விட்டு உயிர் பிரிந்த பின், மரணத்திற்கு அப்பால், அடுத்த உலகில் என் கதி என்ன?" என எண்ணிப் பார்ப்போர் எத்தனை பேர்? மிகக் குறைவானவர்களே!

தன்னடக்கமில்லாமல், நீதி நெறிகளை அலட்சியப் படுத்தி, நல்லொழுக்க நெறிகளைப் புறக்கணித்து, எவ்வாறேனும் வாழ்க்கை இன்பங்களைத் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டு, வாழ்வோரே மிக அதிகம்.

இதன் காரணமாக, மானிடர்களில் பெரும்பாலோருக்கு பிறவிப் பெருங்கடலைக் கடப்பது என்பது சாத்தியமாகாது; அது நினைக்க முடியாத ஒரு செயல்.

"அரிது, அரிது மானிடர் பிறப்பு," என்று சான்றோர் கூறியுள்ளார்கள். கிடைப்பதற்கரிய மானிடப் பிறப்பைப் பெற்றுள்ள நாம், பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியாவிட்டாலும் கூட, உடலை விட்டு உயிர்

பிரிந்த பின், அடுத்த பிறப்பில் தெய்வலோகங்களில் பிறக்கும் பாக்கியத்தையாவது பெற்றிட வேண்டும். மானிடப் பிறப்பிற்கும் கீழுள்ள நான்கு துயரப் பிறப்புகளில் பிறவாமல் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும்.

தெய்வலோகங்களில் பிறப்பதற்குப் பற்றுகளை அறுக்க வேண்டியதில்லை; புலன் இன்பங்களைத் துறக்க வேண்டியதில்லை அவாவை அழிக்க வேண்டியதில்லை. தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்டு, அறநெறிகளை அறிந்து, பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சி, தீயனவற்றைத் தவிர்த்து, நல்வழியில் நடந்து, நற்கருமங்களைச் செய்வோர். தெய்வலோகங்களில் பிறப்பார்கள்.

*இவ்வாறு வாழ்வோரே இவ்வுலகில் சுகம் பெறுவர். இவ்வுலகில் சுகம் பெற விரும்புவோர் இவ்வாறுதான் வாழ வேண்டும். இதுவே அடுத்த உலகிலும் சுகத்தைத் தரும் என்பதால், இவ்வுலக வாழ்விலும், உடலை விட்டு உயிர் பிரிந்தபின், அடுத்த உலகிலும் சுகம் பெற விரும்புவோர் இப்படித்தான் வாழ வேண்டும்.*

*இவ்வகையான வாழ்வையே "மானிட வாழ்க்கை" எனச் சான்றோர் கூறியுள்ளனர். மானிடப் பிறப்பிற்கும் கீழே உள்ள நான்கு துன்பப் பிறப்புகளிலும் இவ்வகையான வாழ்வு வாழ்வதற்குச் சாத்தியமில்லை. மிருக உலகிலும், பேய் உலகிலும், அசுர வேதாள உலகிலும், நரகலோகத்திலும் தர்ம உபதேசங்களைக் கேட்பதற்கும், பாவ புண்ணியங்களை அறிந்து நல்வாழ்வு வாழ்வதற்கும் வாய்ப்பில்லை. மானிடப் பிறப்பில்தான் இந்த வாய்ப்பை நாம் பெறுகின்றோம்.*

*மானிடராய்ப் பிறந்த உயிர்கள், எப்போது இத்தகைய வாழ்வை வாழ்கின்றார்களோ, அப்போதுதான் மானிடப் பிறப்பின் பலனைப் பெறுகிறார்கள். அதாவது, மானிடப் பிறப்பிற்கு ஏற்ப வாழ்ந்து, இவ்வுலக வாழ்விலும் சுகம் பெற்று, உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகிலும், தெய்வலோகங்களில் பிறந்து சுகம் பெறுவார்கள்.*

இதுவே மானிடப் பிறப்பில் உயிர்கள் பெறும் பெரும்பாக்கியமாகும்.

மற்றவரெல்லாம் மானிடப் பிறவிக்கு ஏற்ப வாழ்வதில்லை. அதாவது, சான்றோர் அருளிய தர்ம உபதேசங்களை அலட்சியப் படுத்தி; உதாசீனப்படுத்தி; பாவம் இல்லை, புண்ணியம் இல்லை, வினைப் பயன் இல்லை, அடுத்த உலகம் இல்லை, அடுத்த உலகில் எவரும் தம் செயல்களின் பலனை அனுபவிப்பது இல்லை போன்ற தவறான கருத்துகளைப் பின்பற்றி; தீமையான எண்ணங்களை எண்ணி, தீமையான சொற்களைப் பேசி, பாவ செயல்களைச் செய்வோர் எல்லாம் "மானிடப் பிறப்பிற்கு ஏற்ற வாழ்வு' வாழ்வதில்லை. “மானிட வாழ்வு” வாழ்வதில்லை.

இத்தகையோர், இவ்வுலக வாழ்விலும் சுகம் பெறுவதில்லை; அடுத்த உலகிலும் சுகம் பெறுவதில்லை; பாவ கருமங்களைச் செய்துள்ள இவர்கள், இவ்வுலக வாழ்விலும் துன்புற்று; மரணத்திற்கு அப்பால் தம் பாவ கருமங்களுக்கு ஏற்ப, மிருகமாகவோ, பேயாகவோ, அசுர வேதாளமாகவோ, நரகத்திலோ பிறந்து, அடுத்த உலகிலும் துன்புறுவார்கள்.

இவர்கள் அறிவிலார். மானிடப் பிறப்பின் பெருமையை அறியாதவர்கள்; புனித தர்ம உபதேசங்களின் சிறப்பை உணராதவர்கள்; பெறுவதற்கரிய மானிடப் பிறப்பைப் பெற்றும்; கேட்பதற்கரிய தர்ம உபதேசங்களைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றும்; தம் அறிவின்மையினால் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறியவர்கள்.

"பாவங்கள் செய்யாமல் வாழ முடியுமா? நன்னெறிகளில் ஒழுகி, நல்வழியில் நடந்து, நல்வாழ்வு வாழ முடியுமா?" எனச் சிலர் சந்தேகப்படலாம்.

மனிதர்களால் இதனைச் செய்ய முடியும். முடியும் என்பதால்தான், சான்றோர் இவ்வுலகில் தோன்றி, தர்ம உபதேசங்களைப் பிரகடனம் செய்கிறார்கள்.

முடியும் என்பதால்தான் "பாவங்கள் செய்யாதீர்கள், அதனால் துன்பம் வரும்; நன்னெறிகளில் ஒழுகி, நல்வழியில் நடந்து, நல்வாழ்வு வாழுங்கள், அதனால் சுகம் பெறுவீர்கள்" என இவ்வுலகிற்கு உபதேசம் செய்துள்ளார்கள்.

நமக்கு இப்போது கிடைப்பதற்கரிய மானிடப் பிறப்பு

கிடைத்துள்ளது. தர்ம உபதேசங்களைக் கேட்பதற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. கிடைப்பதற்கரிய இந்த வாய்ப்புகளை நாம் இழந்துவிடக்கூடாது.

தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்டு, நன்னெறியில் ஒழுகி, நல்வழியில் நடந்து, நல்வாழ்வு வாழ வேண்டும். இதைச் செய்தோமென்றால், மரணத்திற்கு அப்பால், மானிடப் பிறப்பிற்கும் கீழே உள்ள நான்கு துன்பப் பிறப்புகளில் பிறவாமல் நம்மை நாமே காத்துக் கொள்ளலாம். மானிட உலகிற்கும் மேலுள்ள தெய்வலோகங்களில் பிறக்கும் பாக்கியத்தைப் பெறலாம்.

---

## *8. நரகத்தையும் பேய்ப்யிறப்பையும் மிருகப்பிறப்பையும் எல்லாத் துன்ப நிலைகளையும் கடக்கும் வழிகள்.*

பிறப்பு - இறப்பு என்னும் சக்கரத்தில் சுழன்று வரும் உயிர்கள், மானிடப் பிறப்பை அடைவது ஓர் அரிய பாக்கியமாகும். ஆறு வகைப் பிறப்புகளிலும் சுழன்று வரும் உயிர்கள், எப்போது மானிட உலகில் பிறக்கிறார்களோ, அப்போது, தர்ம உபதேசங்களைக் கேட்பதற்கும், உள்ளத்தில் பக்தியை வளர்ப்பதற்கும், நன்னெறிகளை அறிந்து நல்வாழ்வு வாழ்வதற்கும், புனிதமான வாழ்வு வாழ்வதற்கும், புண்ணிய கருமங்களைச் செய்வதற்கும் வாய்ப்புகளைப் பெறுகிறார்கள்.

இதன் காரணமாக, மானிடப் பிறப்பிற்கும் கீழுள்ள நான்கு துன்பப் பிறப்புகளிலிருந்தும் விடுபடுவதற்கு மானிடப் பிறப்பு ஒரு நல்ல வாய்ப்பாகும். மானிட உலகிற்கு மேலுள்ள தெய்வலோகங்கள் போவதற்கும் மானிடப் பிறப்பு ஒரு நல்ல வாய்ப்பாகும். பிறவிப் பெருங்கடலைக் கடந்து, மாறி - மாறி வரும் பிறப்பு - இறப்புகளிலிருந்து விடுபட்டு மோட்சம் பெறுவதற்கும் மானிடப் பிறப்பு ஒரு நல்ல வாய்ப்பாகும்.

இப்போது நமக்கு மானிடப் பிறப்பு கிடைத்துள்ளது; தர்ம உபதேசங்களைக்

கேட்கும் வாய்ப்பையும் நாம் பெற்றுள்ளோம். கிடைப்பதற்கரிய இந்த வாய்ப்புகளை நாம் இழந்துவிடக்கூடாது.

உள்ளத்தில் பக்தி கொண்டு, தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்டு, மானிடப் பிறப்பிற்கு ஏற்ப வாழ வேண்டும். இனிமேலும் கீழ்ப்பிறப்புகளில் விழுந்துவிடாமல், இனிமேலும் துன்ப நிலைகளுக்குள் விழுந்துவிடாமல், நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

தற்போதைய மானிடப் பிறப்பில், நம்மால் பிறவிப் பெருங்கடலைக் கடந்து மோட்சமடைய முடியா விட்டாலும்கூட, நரகலோகத்தைக் கடந்துவிட வேண்டும்; மிருக உலகைக் கடந்துவிட வேண்டும்; பேய் உலகைக் கடந்துவிட வேண்டும்; எல்லாத் துன்ப நிலைகளையும் கடந்துவிட வேண்டும்.

அதாவது, நரகலோகப் பிறப்பை அழித்துவிட வேண்டும்; மிருகப் பிறப்பை அழித்துவிட வேண்டும்; பேய்ப்பிறப்பை அழித்துவிட வேண்டும்; எல்லாத் துன்ப நிலைகளையும் அழித்துவிட வேண்டும். மரணத்திற்கு அப்பால், எதிர்வரும் பிறப்புகளில், தெய்வலோகங்களிலும், மானிட உலகிலும் மட்டுமே பிறக்கும் பாக்கியத்தைப் பெற்றிட வேண்டும்.

ஆனால், தெய்வலோகங்களில் பிறப்போரெல்லாம், நரகலோகத்தைக் கடந்துவிட்டார்கள் என்றாகாது; மிருக உலகைக் கடந்துவிட்டார்கள் என்றாகாது; பேய் உலகைக் கடந்துவிட்டார்கள் என்றாகாது; எல்லாத் துன்ப நிலைகளையும் கடந்துவிட்டார்கள் என்றாகாது, எனப் பகவான் புத்தர் கூறியுள்ளார்.

தெய்லோகங்களிலும் மரணம் வரும்; தெய்வலோகங்களில் பிறந்தோரும், அவ்வாழ்வு முடிவுற்ற பின், கீழ்ப்பிறப்புகளுக்குள் விழுந்து விடுவார்கள் எனப் பகவான் புத்தர் கூறியுள்ளார்.

நாமோ, நம்முடைய தற்போதைய வாழ்வு முடிந்தபின், மரணத்திற்கு அப்பால், தெய்வலோகங்களில் பிறக்க விரும்புகிறோம். தெய்வலோக வாழ்வு முடிவுற்றபின், எதிர்வரும் மறுபிறப்புகளில், மீண்டும் தெய்வலோகங்களிலோ, அல்லது மானிட உலகிலோ மட்டுமே பிறக்கும் பாக்கியத்தை அடைய விரும்புகிறோம். நரகலோகப் பிறப்பு, பேய்ப்பிறப்பு, மிருகப்பிறப்பு மற்றும் எல்லாத் துன்ப நிலைகளிலிருந்தும் முழுமையாக விடுபட விரும்புகிறோம்.

அதாவது, இத்துன்பப் பிறப்புகளையெல்லாம் கடக்க விரும்புகிறோம்.

இப்படி ஒரு பாக்கியத்தை நாம் பெற முடியுமா? முடியும் என்றால், எப்படி இப்பாக்கியத்தைப் பெறுவது?

மனிதர்களால் இப்பாக்கியத்தைப் பெற முடியும் என்றும்; எப்படி இப்பாக்கியத்தைப் பெறுவது என்றும் பகவான் புத்தர் இவ்வுலகிற்கு உபதேசம் செய்துள்ளார்.

## *8.1 எப்போது ஒருவர் நல்லொழுக்கமும் பக்தியும் உடையவர் ஆகிறார்.*

ஒரு சமயம் மகானமா எனும் இல்லறவாசி, பகவான் புத்தரிடம் இவ்வாறு கேட்டார்:

"பகவான் , எப்போது ஒருவர் சிஷ்யர் ஆகிறார்?"

"மகானமா, எப்போது ஒருவர் புத்தரிடமும், தர்மத்திடமும், சங்கத்திடமும் சரணடைகின்றாரோ, அப்போது அவர் ஒரு சிஷ்யர் ஆகிறார்."

"பகவான், எப்போது ஒருவர் நல்லொழுக்கமுடையவர் ஆகிறார்?"

"மகானமா, எப்போது உயிர்க்கொலை செய்வதைத் தவிர்க்கின்றாரோ; திருடுவதைத் தவிர்க்கின்றாரோ; தகாத முறையில் காமத்தை நாடுவதைத் தவிர்க்கின்றாரோ; பொய்யைத் தவிர்க்கின்றாரோ; போதையையும், மயக்கத்தையும் உண்டுபண்ணும் மதுபானங்களையும், போதைப் பொருள்களையும் தவிர்க்கின்றாரோ அப்போதிலிருந்து அவர் நல்லொழுக்கமுடையவர் ஆகிறார்."

"பகவான், எப்போது ஒருவர் பக்தி உள்ளவர் ஆகிறார்?"
ஒருவர்

"மகானமா, எப்போது ஒருவர் புத்தரை இவ்வாறு நம்புகின்றாரோ, அதாவது,"

"பகவான் முற்றுப் பெற்றவர்; பூரண ஞானம் பெற்றவர்; அறமும், அறிவும் நிறைந்தவர்; அறவழியில் நடப்பவர்; எல்லா உலகங்களையும் அறிந்தவர்; பயிற்சிக்குக் கட்டுப்படும் மனிதர்களை அடக்கிக் பழக்குவதில் நிகரில்லாதவர்; மனிதர்களுக்கும், தெய்வங்களுக்கும் உபதேசம் செய்பவர்; முதல்வர், பகவான் புத்தர்."

"என நம்புகிறாரோ, அப்போது அவர் பக்தி உள்ளவர் ஆகிறார்."

"பகவான், எப்போது ஒருவர் தயாள குணம் உடையவர் ஆகிறார்?"

"மகானமா, இங்கு, இல்லறத்தில் வாழும் அவர் உள்ளத்தில் கருமித்தனம் இல்லை; அவர் தாராள குணம் உடையவர்; அவர் களங்கமற்றவர்; அடக்கமும், பணிவும் உள்ளவர்; அவரிடம் உதவி கேட்கலாம்; தரும சிந்தனையுடன் ஈவதில் மகிழ்பவர். அதனால், அவர் தயாள குணமடையவர் ஆகிறார்."

(விளக்கம்: இல்லறத்தில் வாழும் ஒருவர், பகவான் புத்தரிடம் பூரண பக்தி கொண்டு, மேற்கூறிய ஐந்து தீய செயல்களையும் தவிர்த்து வாழ்ந்தாரென்றால், அவரிடம் பக்தியும் நல்லொழுக்கமும் இருக்கும்.

மற்றும், இவரிடம் அடக்கமும்; பணிவும்; அன்பும் தயாள சிந்தனையும்; ஈகைக்குணமும் இருக்குமென்றால், இவ்வுலக வாழ்விலேயே இவர் புகழோடு வாழ்வார், அடுத்த உலகில் இவருடைய விதியைக் கூறவும் வேண்டுமா!)

## *8.2 தெய்வலோகம்செல்வதற்குரிய நான்கு வழிகள்.*

ஒரு சமயம் பகவான் புத்தர் தம் சிஷ்யர்களுக்கு இப்படி ஒரு உபதேசம் செய்தார்:

*"பிக்சுகளே, (துறவு பூண்ட தம் சிஷ்யர்களை பகவான் புத்தர் பிக்சு என அழைப்பார் தூய்மையற்ற உயிர்களைத் தூய்மைப் படுத்துவதற்கும் ; அசுத்தமான உயிர்களைப் புனிதமாக்குவதற்கும்;*

தெய்வ லோகம் போவதற்கும் நான்கு வழிகள் உள்ளன.

எந்த நான்கு வழிகள்?

*i) "ஒன்று, புத்தரிடம் பூ ரண பக்தி கொள்ள வேண்டும். அதாவது,*

*"பகவான் முற்றுப் பெற்றவர்; பூரண ஞானம் பெற்றவர்; அறமும் அறிவும் நிறைந்தவர், அறவழியில் நடப்பவர்; எல்லா உலகங்களையும் அறிந்தவர்; பயிற்சிக்குக் கட்டுப்படும் மனிதர்களைப் அடக்கிப் பழக்குவதில் நிகரில்லாதவர்; மனிதர்களுக்கும், தெய்வங்களுக்கும் உபதேசம் செய்பவர், முதல்வர், பகவான் புத்தர்."*

*"என, புத்தரிடம் பூரண பக்தி கொள்ள வேண்டும் . இது முதல் வழி."*

(விளக்கம்: உள்ளத்தில் பக்தியுடையோர், சரியான பக்தி உடையோர், பழிக்கும் பாதத்திற்கும் அஞ்சுவர். ஆனால் உள்ளத்தில் முறையான பக்தி இல்லாதோர், சரியான பக்தி இல்லாதோர், பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சுவதில்லை.

ஆகவே, எவரொருவருக்கு பகவான் புத்தரிடம் தடுமாற்றமில்லாத, உறுதியான பக்தி உண்டோ, அவர் பழிக்கு அஞ்சுவார். பாவத்திற்கு அஞ்சுவார்; தீய செயல்களைச் செய்ய அஞ்சுவார். ஏன்? இவரிடம் முறையான பக்தி உண்டு.

பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சும் இவர், பாவ கருமங்களைப் படிப்படியாக விட்டுவிடுவார். தீயொழுக்கங்களைப் படிப்படியாக விட்டுவிடுவார்; நல்லொழுக்க நெறிகளைப் படிப்படியாக மேற்கொள்வார். நல்வாழ்வு வாழ்வதற்கு முயற்சி செய்வார். அதன் காரணமாக இவர், நல்லொழுக்கங்களிலும், நற்பண்புகளிலும், நற்குணங்களிலும் வளர்வார்.

அழுக்குப் படிந்துள்ள ஒரு துணியை நீராலும், சவர்க்காரத்தாலும் சுத்தப் படுத்துவது போல், பகவான் புத்தரிடம் உள்ள பக்தியினால், இவர் தம்மிடமுள்ள அசுத்தங்களைப் போக்கி, தூய்மையடைவார். மரணத்திற்கு

அப்பால், மறு உலகில், தெய்வ லோகத்தில் பிறப்பார். இது தெய்வலோகம் செல்வதற்று முதல் வழி. அடுத்து பகவான் புத்தர், இரண்டாவது வழியைக் கூறுகிறார்.)

*ii) "இரண்டு, தர்மத்தை ( தர்ம உபதேசத்தை ) முழுமையாக நம்ப வேண்டும். அதாவது,*

*"மிகத் தெளிவாகப் பகவான் தர்மத்தை (தர்ம உபதேசத்தை) அறிவித்துள்ளார்; இந்த வாழ்விலேயே அதன் நன்மைகளை நாம் காணலாம்; தர்ம உபதேசம் கால வரம்பற்றது; எல்லோரையும் அழைக்கின்றது ; நல்வழியைக் காட்டுகின்றது; அறிவுடையோர் தர்ம உபதேசத்தைப் புரிந்து கொள்ளலாம்."*

*"என, தர்ம உபதேசத்தை முழுமையாக நம்ப வேண்டும். இது இரண்டாவது வழி."*

(விளக்கம்: தர்ம உபதேசத்தை நம்பும் மனத்துடன் கேட்கும் ஒருவர், “பாவம் உண்டு; புண்ணியம் உண்டு, நல்வினை உண்டு, தீவினை உண்டு, செயல்களுக்கு பிற்பலன் உண்டு; அடுத்த உலகம் உண்டு; அடுத்த உலகில் உயிர்கள் தம் செயல்களின் பலனை அனுபவிக்க வேண்டும்" எனப் புரிந்து கொள்வார்.

"பாவ கருமங்களைச் செய்வோர், இவ்வுலக வாழ்விலும் துன்பப்படுவார்கள்; மரணத்திற்கு அப்பால், அடுத்த உலகத்திலும், நரகத்திலோ, மிருகமாகவோ, பேயாகவோ பிறந்து துன்பப்படுவார்கள். பாவ கருமத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது" என இவர் புரிந்து கொள்வார்.

"நல்லொழுக்கங்களை மேற்கொண்டு, நல்வழியில் நடந்து, நல்வாழ்வு வாழ்வோர், இவ்வுலக வாழ்விலும் சுகம் பெறுவார்கள்; மரணத்திற்கு அப்பால், அடுத்த உலகிலும் தெய்வலோகத்தில் பிறந்து சுகம் பெறுவார்கள்” என இவர் புரிந்து கொள்வார்.

அதன் காரணமாக, தர்ம உபதேசத்தில் பூரண நம்பிக்கை உள்ள ஒருவர், பாவம் செய்ய அஞ்சுவார். தீயொழுக்கங்களையும், தீய

செயல்களையும் படிப்படியாக விட்டுவிடுவார். நல்வழியை நாடுவார். நல்லொழுக்கங்களிலும், நற்பண்புகளிலும் நற்குணங்களிலும் படிப்படியாக வளர்வார். படிப்படியாகத் தம்மிடமுள்ள அசுத்தங்களைப் போக்கித் தூய்மையடைவார். மரணத்திற்கு அப்பால், மறு உலகில், தெய்வலோகத்தில் பிறப்பார். இது தெய்வலோகம் செல்வதற்கு இரண்டாவது வழி. அடுத்து பகவான் புத்தர், மூன்றாவது வழியைக் கூறுகிறார்.)

*iii) "மூன்று, சங்கத்தை முழுமையாக நம்ப வேண்டும். இது மூன்றாவது வழி."*

(விளக்கம்: சங்கத்தை மதித்து மரியாதை செய்து வணங்கி; அங்கு தானமும், நற்செயல்களும் செய்வோர் புண்ணியம் பெறுவார் என்பதால், அதன் காரணமாக இவர் தெய்வலோகம் செல்வார். இது தெய்வலோகம் செல்வதற்கு மூன்றாவது வழி. அடுத்து பகவான் புத்தர், நான்காவது வழியைக் கூறுகிறார்.)

*iv) "நான்கு, பெரியோர் போற்றும் நல்லொழுக்க நெறிகளை நாட வேண்டும். தன் நடத்தையில் இடைவிடாத, தொடர்ச்சியான, களங்கம் இல்லாத, முரண்பாடில்லாத நல்லொழுக்கங்களை மேற்கொள்ள வேண்டும். இது நான்காவது வழி."*

(விளக்கம்: பெரியோர் போற்றும் நல்லொழுக்க நெறிகளை நாடுபவர், அவற்றில் நாட்டமுள்ளவர், தன்னிடமுள்ள குற்றம் குறைகளைக் காண்பார்; தன்னிடமுள்ள தீயொழுக்கங்களைக் கண்டு வெட்கி நாணுவார்.

தன்னிடமுள்ள தீயொழுக்கங்களையும், குறைபாடுகளையும் கண்டு வெட்கி நாணும் இவர், தன் நடத்தையில் ஒழுக்கமில்லை, தன் நடத்தையில் தூய்மை இல்லை, தன்னிடம் அசுத்தம் உண்டு என்பதைப் புரிந்து கொள்வார்.

இவருடைய உள்ளம் உண்மையாகவே பெரியோர் போற்றும் நல்லொழுக்க நெறிகளை நாடுகிறது என்பதால், இப்போது இவர்

தன்னிடமுள்ள தீயொழுக்கங்களைக் கைவிடுவதற்கும், நல்லொழுக்கங்களை மேற்கொள்வதற்கும் முயற்சி செய்வார்.

மனம் தளராது முயற்சி செய்தார் என்றால், படிப்படியாக அசுத்தங்கள் இவரை விட்டு விலகும்; படிப்படியாக இவரிடம் நல்லொழுக்க நெறிகளும், நற்பண்புகளும், நற்குணங்களும் வளரும். நாளடைவில் எல்லா அசுத்தங்களிலிருந்தும் விலகி, நல்லொழுக்க நெறிகளிலும், நற்பண்புகளிலும், நற்குணங்களிலும் உறுதியாக நிற்பார்.

இப்போது இவர் நடத்தையில் இடைவிடாத, தொடர்ச்சியான, களங்கமில்லாத, முரண்பாடில்லாத நல்லொழுக்கம் இருக்கும். இவர் தூய்மை அடைந்துவிட்டார். மரணத்திற்கு அப்பால், மறு பிறப்பில் தெய்வலோகத்தில் பிறப்பார். இது தெய்வலோகம் செல்வதற்கு நான்காவது வழி.)

"பிக்சுகளே, இவை நான்கும் தூய்மை அற்ற உயிர்களைத் தூய்மைப் படுத்துவதற்கும்; அசுத்தமான உயிர்களைப் புனிதமாக்குவதற்கும், தெய்வலோகத்திற்குப் போவதற்குமுள்ள நான்கு வழிகள்."

## *8.3 குற்றமுள்ள நெஞ்சும் அச்சமும்*

அனாத பிண்டகர் என்பவர் பகவான் புத்தர் காலத்தில் வாழ்ந்தவர். இவர் மனைவி மக்களோடு இல்லற வாழ்வு வாழ்ந்து வந்தார். இவர் ஒரு செல்வந்தர், பகவான் புத்தரிடம் மிகவும் பக்தி கொண்டு, தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்டு, பல புண்ணிய காரியங்கள் செய்து, நல்வாழ்வு வாழ்ந்தார்.

இவர் ஒரு முறை பகவான் புத்தரைக் காண வந்தார். பகவான் புத்தருக்கு வணக்கம் தெரிவித்த பின், ஒருபுறமாக அமர்ந்தார். பகவான் புத்தர் அவருக்கு இவ்வாறு உபதேசம் செய்தார்:

*"இல்லறத்தில் வாழ்பவரே, ஐந்து செயல்கள், குற்றமுள்ள நெஞ்சத்தையும், அச்சத்தையும் உண்டாக்கும். எப்போது ஒருவர், குற்றமுள்ள நெஞ்சினையும், அச்சத்தையும் உண்டாக்கும் ஐந்து செயல்களையும் முழுமையாகத் தவிர்த்துவிட்டாரோ, நான்கு செல்வங்களைத் தேடி விட்டாரோ, அப்போது அவர், தான் விரும்பினால் தனக்குத் தானே இப்படிக் கூறிக்கொள்ளலாம்.*

*நான் நரகலோகப் பிறப்பை அழித்து விட்டேன்; மிருகப் பிறப்பை அழித்து விட்டேன்; பேய்ப்பிறப்பை அழித்து விட்டேன்; எல்லாத் துன்பப் நிலைகளயும் அழித்துவிட்டேன். இனி எனக்கு வீழ்ச்சி என்பது இல்லை; நான் "நதியைக் கடப்பவர்;" மோட்சத்தை நோக்கிச் செல்கிறேன்.*

(விளக்கம்: அதாவது குற்றமுள்ள நெஞ்சினையும் அச்சத்தையும் உண்டு பண்ணும் ஐந்து செயல்களை முழுமையாகத் தவிர்க்க வேண்டும்; நான்கு செல்வங்களைத் தேட வேண்டும். எவரொருவர் இதைச் செய்து முடிக்கின்றாரோ, நிறைவேற்றுகின்றாரோ, அவர் இப்படிக் கூறிக் கொள்ளலாம்:

"நான் நரகலோகப் பிறப்பை அழித்து விட்டேன்; மிருகப் பிறப்பை அழித்து விட்டேன்; பேய்ப்பிறப்பை அழித்து விட்டேன். இனி எனக்கு வீழ்ச்சி இல்லை; இனி எனக்குத் துன்ப நிலைகள் இல்லை; “நான் நதியைக் கடப்பவர்;" மோட்சத்தை நோக்கிச் செல்கிறேன்."

இத்தகையோர், தம்முடைய மானிட வாழ்வு முடிவுற்றதும், தெய்வலோகங்களில் பிறப்பார்கள். அவ்வாழ்வு முடிவுற்றதும் மீண்டும் தெய்வலோகங்களிலோ, அல்லது மானிட உலகிலோ மட்டும்தான் இவர்கள் பிறப்பார்கள். இவர்கள் இனிமேல் நரகத்திலோ , மிருகமாகவோ, பேயாகவோ பிறப்பதில்லை, எல்லாத் துன்ப நிலைகளையும் இவர்கள் கடந்து விட்டார்கள். இனிமேலும் இவர்கள் கீழ்ப் பிறப்புகளுக்குள் விழுவதில்லை.

இவர்கள் பிறவிப் பெருங்கடலை இன்னும் கடக்கா போதிலும், நரகப் பிறப்பு , மிருகப் பிறப்பு , பேய்ப்பிறப்பு மற்றும் எல்லாத் துன்ப நிலைகளையும் கடந்துவிட்டார்கள். (ஆகவே, இவர்கள் “நதியைக் கடப்பவர்கள்") இனிமேல் இவர்கள் தெய்லோகங்களிலும், மானிட

உலகிலும் மட்டும்தான் பிறப்பார்கள்.

இவர்கள் பிறவிப் பெருங்கடலைக் கடப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு விட்டார்கள் என்றால், அப்பாக்கியத்தை அடையும் வழியில் செல்வார்கள். ஆகவே, இவர்கள் மோட்சத்தை நோக்கிச் செல்பவர்கள், மோட்சம் இவர்களுக்கு நிச்சயம்.

பிறவிப் பெருங்கடலைக் கடப்பதைக் குறிக்கோளாகக் கொண்டுவிட்ட இவர்களுக்கு, அதிக பட்சம் இன்னும் ஏழு பிறப்புகளே உண்டு எனப் பகவான் புத்தர் கூறியுள்ளார். தெய்வலோகங்களிலும் மானிட உலகிலும் இன்னும் அதிக பட்சம் ஏழு முறைகளே மீண்டும் பிறப்பார்கள் என்றும், இந்த ஏழு பிறப்புகளுக்குள் பிறவிப் பெருங்கடலைக் கடந்து மோட்ச நிலையை அடைவார்கள் என்றும் பகவான் புத்தர் கூறியுள்ளார். மோட்சம் இவர்களுக்கு நிச்சயம்.

ஆனால், மற்றவர்களெல்லாம், அதாவது, குற்றமுள்ள நெஞ்சினையும், அச்சத்தையும் உண்டு பண்ணும் ஐந்து செயல்களையும் முழுமையாகத் தவிர்க்காதோர், நான்கு செல்வங்களையும் தேடிப் பெறாதோர், தாம் செய்த புண்ணிய கருமங்களின் பலனால் தெய்வலோகங்களில் பிறந்த போதிலும், இவர்கள் இன்னும் நரகலோகப் பிறப்பையும், மிருகப் பிறப்பையும், பேய்ப் பிறப்பையும், துன்ப நிலைகளையும் கடக்கவில்லை; அழிக்க வில்லை.

மானிட வாழ்வில் தாம் செய்த புண்ணிய கருமங்களின் இன்பப் பலனைத் தெய்வலோகங்களில் அனுபவித்த பின், தெய்வலோக வாழ்வு முடிவுற்றதும், இவர்கள் கீழ்ப்பிறப்புகளுக்குள் விழுந்துவிடுவார்கள். நரகலோகத்திலோ, மிருகமாகவோ, பேயாகவோ மீண்டும் பிறப்பார்கள். இவர்கள் தெய்வலோகங்களில் பிறந்த போதிலும், நரகலோகப் பிறப்பையும், மிருகப் பிறப்பையும், பேய்ப் பிறப்பையும், துன்ப நிலைகளையும் இன்னும் அழிக்கவில்லை; இன்னும் கடக்கவில்லை.

தொடர்ந்து பகவான் புத்தர், ஒழிக்க வேண்டிய ஐந்து செயல்களையும்; தேட வேண்டிய நான்கு செல்வங்களையும் பற்றி விளக்குகிறார்:)

*"குற்றமுள்ள நெஞ்சத்தையும் அச்சத்தையும் உண்டு பண்ணும் எந்த ஐந்து செயல்களையும் இவர் முழுமையாகத் தவிர்த்து விட்டார்?"*

*i) "பிறர் பொருளைக் களவாடுபவரிடம் குற்றமுள்ள நெஞ்சும் அச்சமும் இருக்கும். அதன் காரணமாக, இவர் மனத்தில் வேதனையும் விசனமும் எழுந்து, இவரை வருத்தித் துன்புறுத்தும். அடுத்த உலகிலும் இவரைத் துன்பமும், துயரமும் வருத்தும்." (அதாவது, துன்பப் பிறப்புகளில் பிறந்து துன்புறுவார்)*

*"ஆனால், பிறர் பொருளைக் களவாடுவதைத் தவிர்ப்பவர் நெஞ்சில் குற்றமில்லை, அச்சமில்லை. அதன் காரணமாக இவர் மனத்தில் வேதனையும் விசனமும் எழுவதில்லை. இவரைத் துன்பமும் துயரமும் இங்கும் வருத்தித் துன்புறுத்துவதில்லை, அடுத்த உலகிலும் இவரைத் துன்பமும் துயரமும் வருத்துவதில்லை. (அதாவது, இவர் துயரப் பிறப்புகளில் பிறந்து துன்புறுவதில்லை.)*

*ii) "இது போல்தான் பொய் பேசுவதுவும். மனமறிய வேண்டுமென்று பொய் பேசுபவரிடம் குற்றமுள்ள நெஞ்சும் அச்சமும் இருக்கும். அதன் காரணமாக, இவர் மனத்தில் வேதனையும் விசனமும் எழுந்து, இவரை இங்கும் வருத்தித் துன்புறுத்தும்; அடுத்த உலகிலும் இவரைத் து ன்பமும் துயரமும் வருத்தும்." (அதாவது, துன்பப் பிறப்புகளில் பிறந்து துன்புறுவார்.)*

*ஆனால், மனமறிய வேண்டுமென்றே பொய் பேசுவதைத் தவிர்ப்பவர் நெஞ்சில் குற்றமில்லை, அச்சமில்லை. அதன் காரணமாக, இவர் மனத்தில் வேதனையும், விசனமும் எழுவதில்லை; இவரைத் துன்பமும் துயரமும் இங்கும் வருத்தித் துன்புறுத்து வதில்லை; அடுத்த உலகிலும் இவரைத் துன்பமும் துயரமும் வருத்துவதில்லை.*

*iii) "இது போலவே, தவறான முறையில் காம இன்பங்களை*

*நாடுபவர். தவறான முறையில் காம இன்பங்களை நாடுபவரிடம் குற்றமுள்ள நெஞ்சும் அச்சமும் இருக்கும். அதன் காரணமாக, இவர் மனத்தில் வேதனையும் விசனமும் எழுந்து இவரை இங்கும் வருத்தித் துன்புறுத்தும்; அடுத்த உலகிலும் இவரைத் துயரமும் துன்பமும் வருத்தும்."*

*"ஆனால், தவறான முறையில் காம இன்பத்தை நாடாதவர் நெஞ்சில் குற்றமில்லை, அச்சமில்லை. அதன் காரணமாக, இவர் மனத்தில் வேதனையும் விசனமும் எழுவதில்லை; இவரைத் துன்பமும் துயரமும் இங்கும் வருத்தித் துன்புறுத்துவதில்லை; அடுத்த உலகிலும் இவரைத் துன்பமும் துயரமும் வருத்துவதில்லை."*

*IV) "இது போலவே உயிர்க்கொலை செய்வதும், உயிர்க்கொலை செய்பவரிடம் குற்றமுள்ள நெஞ்சும் அச்சமும் இருக்கும். அதன் காரணமாக இவர், மனத்தில் வேதனையும் விசனமும் எழுந்து இவரை இங்கும் வருத்தித் துன்புறுத்தும்; அடுத்த உலகிலும் இவரைத் துன்பமும் துயரமும் வருத்தும்."*

*"ஆனால், உயிர்க் கொலை செய்வதைத் தவிர்ப்பவர் நெஞ்சில் குற்றமில்லை, அச்சமில்லை; அதன் காரணமாக இவர் மனத்தில் வேதனையும் விசனமும் எழுவதில்லை; இவரைத் துன்பமும் துயரமும் இங்கும் வருத்தித் துன்புறுத்துவதில்லை; அடுத்த உலகிலும் இவரைத் துன்பமும் துயரமும் வருத்துவதில்லை.*

*V) "இதுபோலவே, போதையூட்டும் பொருள்களை நாடுபவர். போதையை விரும்பி, போதையூட்டும் பொருள்களை நாடி, போதையில் சுகத்தைக் காண்பவரிடம் குற்றமுள்ள நெஞ்சும் அச்சமும் இருக்கும். அதன் காரணமாக, இவர் மனத்தில் வேதனையும் விசனமும் எழுந்து இவரை இங்கும் வருத்தித் துன்புறுத்தும், அடுத்த உலகிலும் இவரைத் துன்பமும் துயரமும் வருத்தும்."*

*"ஆனால், போதைப் பொருளில் சுகத்தை நாடாதவரின் நெஞ்சில் குற்றமில்லை, அச்சமில்லை. அதன் காரணமாக இவர் மனத்தில் வேதனையும் விசனமும் எழுவதில்லை; இவரைத் துன்பமும் துயரமும் இங்கும் வருத்தித் துன்புறுத்துவதில்லை; அடுத்த உலகிலும் இவரைத் துன்பமும் துயரமும் வருத்துவதில்லை."*

*"குற்றமுள்ள நெஞ்சத்தையும் அச்சத்தையும் உண்டு பண்ணும் இந்த ஐந்து செயல்களையும் இவர் ஒழித்து விட்டார்."*

*"எந்த நான்கு செல்வங்களையும் இவர் தேடிவிட்டார்?"*

*i) "புத்தரிடம் இவருக்குத் தடுமாற்றம் இல்லாத, உறுதியான பக்தி உண்டு.*

(விளக்கம்: பகவான் புத்தரிடம் இவருக்குப் பூரண பக்தி உண்டு. இது பக்திச் செல்வம். – புத்தம் சரணம் கச்சாமி)

*ii) "தர்ம உபதேசத்தில் இவருக்கு உறுதியான, தடுமாற்றம் இல்லாத நம்பிக்கை உண்டு."*

(விளக்கம் : பகவான் புத்தர் அருளிய தர்ம உபதேசங்களில் இவருக்குப் பூரண நம்பிக்கை உண்டு. இனிமேலும் இவர் உள்ளத்தில் சந்தேகமும் தடுமாற்றமும் இல்லை. தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்கும ஒருவர், நன்மை - தீமை, பாவம் – புண்ணியம்; நல்வினை - தீவினை; வினைப்பயன் இவற்றை அறிந்து கொள்வாரென்பதால், இது அறிவுச் செல்வம். - தர்மம் சரணம் கச்சாமி.)

*iii) "சங்கத்திடம் இவருக்கு உறுதியான தடுமாற்றமில்லாத பக்தி உண்டு."*

(விளக்கம்: சங்கம் என்பது, துறவு பூண்ட பகவான் புத்தரின் சிஷ்யர்களைக் குறிக்கும். இவர்கள், இவ்வுலகப் பற்றுகளை எல்லாம் துறந்து,

தூய்மையான, பரிசுத்தமான, மாசற்ற வாழ்வு வாழ்வோர். அதன் காரணமாக, வணக்கத்திற்கும், மதித்து மரியாதை செய்வதற்கும் இவர்கள் தகுதி உடையோர், யோக்கியதை உள்ளோர்.

மாசற்ற வாழ்வு வாழும் இவர்களுக்குக் கொடுக்கும் தானமும், நன்கொடைகளும் பெரும் புண்ணிய பலனைத் தரும். இதனிலும் சிறந்த புண்ணிய கருமம் இவ்வுலகில் வேறு இல்லை.

ஆகவே, சங்கத்தை வணங்கி, மதித்து மரியாதை செய்து, அங்கு தானமும் நன்கொடைகளும் கொடுப்போர் புண்ணிய செல்வத்தைப் பெறுவார்கள். இது புண்ணிய செல்வத்தைப் பெறும் வழி. - சங்கம் சரணம் கச்சாமி)

*iv) "இவரிடம் பெரியோர் போற்றும் நல்லொழுக்க நெறிகள் உண்டு. இவர் நடத்தையில் இடைவிடாத, தொடர்ச்சியான களங்கமில்லாத, முரண்பாடில்லாத ஒழுக்கம் இருக்கும்."*

(விளக்கம்: பெரியோர் போற்றும் நல்லொழுக்கம் எவை: பொய், களவு, உயிர்க்கொலை, விபச்சாரம், போதைப் பொருள் ஆகியவற்றைத் தவிர்த்து, நல்வழியில் நடந்து, நல்வாழ்வு வாழ்வது. இது நல்லொழுக்கச் செல்வம்.)

*"இந்த நான்கு செல்வங்களும் இவரிடம் உண்டு,*

(விளக்கம்: புத்தம், தர்மம், சங்கம் இந்த மூன்று வைடூரியங்களிலும் பூரண பக்தியும், நடத்தையில் ஒழுக்கமும் இவரிடம் உண்டு.)

*"குற்றமுள்ள நெஞ்சத்தையும் அச்சத்தையும் உண்டு பண்ணும் இந்த ஐந்து செயல்களையும் ஒழித்து விட்ட ஒருவர்; இந்த நான்கு செல்வங்களையும் தேடி விட்ட ஒருவர், தான் விரும்பினால் தனக்குத் தானே இப்படிக் கூறிக் கொள்ளலாம்.*

*"நான் நரகலோகப் பிறப்பை அழித்து விட்டேன்; மிருகப்*

*பிறப்பை அழித்து விட்டேன்; பேய்ப்பிறப்பை அழித்து விட்டேன்; எல்லாத் துன்ப நிலைகளையும் அழித்துவிட்டேன்; இனி எனக்கு வீழ்ச்சி இல்லை. நான் நதியைக் கடப்பவர்; மோட்சத்தை நோக்கிச் செல்கிறேன்."*

(விளக்கம்: அதாவது, இத்தகையோர் இனிமேல் நரகத்திலோ, பேயாகவோ, மிருகமாகவோ, அல்லது மற்றத் துன்ப நிலைகளிலோ பிறப்பதில்லை. இப்பிறப்புகளையெல்லாம் இவர்கள் கடந்துவிட்டார்கள். இனிமேல் இவர்கள் தெய்வலோகங்களிலும் மானிட உலகிலும் மட்டுமே பிறப்பார்கள். இவர்கள் மோட்சத்தை நோக்கிச் செல்பவர்கள். இவர்கள் மோட்சமடைவது நிச்சயம்).

## *8.4 தர்மக் கண்ணாடி.*

ஒருமுறை பகவான் புத்தர், நட்டிக்கா என்னும் ஊரில் தங்கி இருந்தார். அப்போது அவருடைய சிஷ்யர், மதிப்பிற்குரிய ஆனந்தர் பகவானை அணுகி, வணக்கம் தெரிவித்த பின், ஒருபுறமாக அமர்ந்து, இப்படிக் கேட்டார்:

*"பகவான், நட்டிக்காவில் இல்லற வாழ்வு வாழ்ந்த சிஷ்யர்கள், ககுதா, களிங்கா, நிக்காட்டா, கதிசேகா, துத்தா, சண்டுதா, பாதா, சுபாதா. இவர்கள் எல்லாம் இறந்துவிட்டார்கள். மறு உலகில் இவர்களின் விதி என்ன?"*

*"ஆனந்தா, இல்லற வாழ்வு வாழ்ந்த ககுதா, மரணத்திற்கு அப்பால், மறு பிறப்பில், பிரம்ம லோகத்தில் பிறந்துள்ளார். அவர் அங்கேயே மோட்சமடைவார். அவர் இனிமேல் இவ்வுலகிற்குத் திரும்பி வரமாட்டார்.*

*"இல்லற வாழ்வு வாழ்ந்த சிஷ்யர்கள் களிங்காவும், மற்றவர்களும், மரணத்திற்கு அப்பால், மறுபிறப்பில், பிரம்ம லோகத்தில் பிறந்துள்ளார்கள். இவர்களும் அங்கேயே மோட்சமடைவார்கள். இவர்களும் இனிமேல் இவ்வுலகிற்குத்*

*திரும்பி வரமாட்டார்கள்"*

*"ஆனந்தா, இதே நட்டிக்காவில் இல்லற வாழ்வு வாழ்ந்த ஐம்பதுக்கும் அதிகமான சிஷ்யர்கள், மரணத்திற்கு அப்பால், மறு பிறப்பில் அந்நிலையையே அடைந்துள்ளார்கள்.'*

*"ஆனந்தா, இதே நட்டிக்காவில், இல்லற வாழ்வு வாழ்ந்த தொண்ணூறுக்கும் அதிகமான சிஷ்யர்கள், மரணத்திற்கு அப்பா, மறு பிறப்பில், தெய்வ லோகங்களில் பிறந்துள்ளார்கள். இவர்கள் இவ்வுலகிற்கு இன்னும் ஒரு முறையே திரும்பி வருவார்கள். இன்னும் ஒரு முறையே திரும்பி இவ்வுலகிற்கு வரும் இவர்கள், இங்கேயே மோட்சம் அடைவார்கள்."*

(அதாவது, தெய்வ லோகங்களில் பிறந்துள்ள இவர்கள், இன்னும் ஒரு முறையே மானிட உலகில் பிறப்பார்கள். அப்போது இங்கேயே மோட்சமடைவார்கள்.)

*"ஆனந்தா, இதே நட்டிக்காவில், இல்லற வாழ்வு வாழ்ந்த ஐநூற்று அறுபது சிஷ்யர்கள், மரணத்திற்கு அப்பால், மறு பிறப்பில் "நதியைக் கடப்பவர்" நிலையை அடைள்துள்ளார்கள். இவர்கள் யாவரும் தெய்வ லோகங்களில் பிறந்துள்ளார்கள். இவர்களுக்கு இனி வீழ்ச்சி இல்லை. இவர்கள் எல்லாத் துயரப் பிறப்புகளையும் அழித்து விட்டார்கள்."*

*"ஆனந்தா, மானிடராய்ப் பிறந்தோர் இறக்கத்தான் வேண்டும். இதில் ஆசிசரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால், ஒவ்வொரு தடவையும் ஒரு மனிதர் இறந்தபோது , நீ ததாகதரிடம் (பகவான் புத்தரிடம்) வந்து அந்த மனிதரின் விதியைக் கேட்பது, ததாகதருக்குத் தொந்தரவு கொடுப்பதாகும். ஆகவே, ஆனந்தா, நான் உனக்கு "தர்மக் கண்ணாடி" என்ற ஓர் உபதேசத்தை உபதேசம் செய்கிறேன்.*

*"இந்த உபதேசத்தின் மூலம் ஒரு சிஷ்யர் தன் விதியை, தான் விரும்பினால் தானே இப்படிக் கூறிக் கொள்ளலாம்.*

*"நான் நரக லோகப் பிறப்பை அழித்துவிட்டேன்; மிருகப் பிறப்பை அழித்துவிட்டேன்; பேய்ப்பிறப்பை அழித்துவிட்டேன்; எல்லாத் துன்பப் பிறப்புகளையும் அழித்துவிட்டேன். இனி எனக்கு வீழ்ச்சி இல்லை நான் "நதியைக் கடப்பவர்;" மோட்சத்தை நோக்கிச் செல்கிறேன்."*

*இந்தத் "தர்மக் கண்ணாடி" என்பது என்ன?*

*"ஆனந்தா, இங்கு ஒரு சிஷ்யருக்கு, புத்தரிடம் தடுமாற்றமில்லாத, உறுதியான, பூரண பக்தி உண்டு;*

*" புத்தர் அருளிய தர்ம உபதேசங்களில் இந்தச் சிஷ்யருக்கு தடுமாற்றமில்லாத, உறுதியான, பூரண நம்பிக்கை உண்டு;"*

*"சங்கத்திடம் இந்தச் சிஷியருக்கு தடுமாற்றமில்லாத, உறுதியான, பூரண நம்பிக்கை உண்டு."*

*"மற்றும் இந்தச் சிஷ்யரிடம், பெரியோர் போற்றும் நல்லொழுக்க நெறிகள் உண்டு. இவர் நடத்தையில், இடைவிடாத, தொடர்ச்சியான, களங்கமில்லாத, முரண்பாடில்லாத ஒழுக்கம் இருக்கும்."*

(விளக்கம்: பெரியோர் போற்றும் நல்லொழுக்கம் எவை? பொய் களவு, உயிர்க்கொலை, விபச்சாரம், போதைப் பொருள், ஆகியவற்றைத் தவிர்த்து, நல்வழியில் நடந்து நல்வாழ்வு வாழ்வதாகும்.)

*"ஆனந்தா, இதுதான் "தர்மக் கண்ணாடி" இதன் மூலம் ஒரு சிஷ்யர், தான் விரும்பினால், தன் விதியைத் தானே இப்படிக் கூறிக் கொள்ளலாம்."*

*"நான் நரகலோகப் பிறப்பை அழித்துவிட்டேன்; மிருகப் பிறப்பை அழித்து விட்டேன்; பேய்ப்பிறப்பை அழித்துவிட்டேன். எல்லாத் துன்ப நிலைகளையும் அழித்துவிட்டேன். இனி எனக்கு வீழ்ச்சி இல்லை. நான் "நதியைக் கடப்பவர்" மோட்சத்தை நோக்கிச் செல்கிறேன்."*

(விளக்கம்: கண்ணாடியில் நாம் நம் முகத்தைப் பார்க்கலாம். முகத்தில் அழுக்கிருந்தால், கண்ணாடி அழுக்கைக் காட்டும்; முகத்தில் அழக்கில்லாவிட்டால், கண்ணாடி சுத்தமான முகத்தைக் காட்டும்.

"இந்தத் "தர்மக் கண்ணாடி" எனும் உபதேசத்தையும் ஒரு கண்ணாடி போல் உபயோகிக்க வேண்டும். சாதாரண கண்ணாடியில் முகத்தைப் பார்ப்பது போல், இந்தத் தர்மக் கண்ணாடியில் நாம் நம் உள்ளத்தைப் பார்க்க வேண்டும். எப்படி இந்தக் கண்ணாடியை உபயோகிப்பது."

"என் உள்ளத்தில் பகவான் புத்தரிடம் பூரண பக்தி உண்டா?" என நம் உள்ளத்தை நாமே பார்க்க வேண்டும்.

"என் உள்ளத்தில் தர்ம உபதேசத்தில் பூரண நம்பிக்கை உண்டா? என நம் உள்ளத்தை நாமே பார்க்க வேண்டும்.

"என் உள்ளத்தில் சங்கத்திடம் பூரண நம்பிக்கை உண்டா ?" என நம் உள்ளத்தை நாமே பார்க்க வேண்டும்.

"என் நடத்தையில் பெரியோர் போற்றும் ஒழுக்கம் உண்டா?” என நம் உள்ளத்தை நாமே பார்க்க வேண்டும்.

உண்டு என்றால், நமக்கு நாமே இப்படிக் கூறிக் கொள்ளலாம்:

"என்னிடம் இந்த நான்கு செல்வங்களும் உண்டு. நான் நரகலோகப் பிறப்பை அழித்து விட்டேன்; மிருகப் பிறப்பை அழித்து விட்டேன்; பேய்ப்பிறப்பை அழித்து விட்டேன். எல்லாத் துன்ப நிலைகளையும் அழித்துவிட்டேன். இனி எனக்கு வீழ்ச்சி இல்லை. நான் “நதியைக் கடப்பவர்,” மோட்சத்தை நோக்கிச் செல்கிறேன்."

இந்த நான்கு செல்வங்களையும் தேடிவிட்ட ஒருவர், எல்லாத் துன்ப விதிகளையும் அழித்துவிட்டார். மானிட வாழ்விலும் நன்னெறிகளில் ஒழுகி, நல்வழி நடந்து, சுகம் பெற்று, புகழோடு வாழ்வார்; மரணத்திற்கு அப்பால், தெய்வ லோகத்தில் பிறந்து சுகம் பெறுவார்.

தெய்வ லோகத்தில் பிறந்து சுகம் பெறும் இவர், தெய்வலோக வாழ்வு முடிவுற்றதும், மறு பிறப்பில், மீண்டும் தெய்வ லோகத்திலோ அல்லது மானிட உலகிலோ மட்டுமே பிறப்பார்.

இவர் இனிமேலும் நரகத்திலோ, மிருகமாகவோ, பேயாகவோ, அல்லது துன்ப நிலைகளிலோ பிறப்பதில்லை. இப்பிறப்புகளை எல்லாம் இவர் அழித்துவிட்டார். இப்பிறப்புகளையெல்லாம் இவர் கடந்துவிட்டார். ஆகவே, இவர் "நதியைக் கடப்பவர்" இவருக்கு இனி வீழ்ச்சி இல்லை.

இவர் மோட்சத்தைக் குறிக் கோளாகக் கொண்டு விட்டாரென்றால், இவருக்கு இன்னும் அதிக பட்சம் ஏழு பிறப்புகளே உண்டு. தெய்வலோகங்களிலும், மானிட உலகிலும் இன்னும் அதிக பட்சம் ஏழு தடவைகளே பிறக்கும் இவர், இந்த ஏழு பிறப்புகளுக்குள் மோட்சமடைவார். மோட்சம் இவருக்கு நிச்சயம். இது, பகவான் புத்தர் இவ்வுலகிற்கு வழங்கும் உத்தரவாதம்).

## *8.5 பிறருக்கு அறிவுரை கூறுதல்.*

ஒரு முறை பகவான் புத்தர் தம் சிஷ்யர்களுக்கு இவ்வாறு உபதேசம் செய்தார்:

*"எவரிடமெல்லாம் உங்களுக்கு அனுதாபம் உண்டோ; எவரெல்லாம் உங்கள் பேச்சை அக்கரையோடு கேட்க வேண்டும் என்று கருதுகிறார்களோ, இத்தகையோர் உங்களுக்கு அறிமுகம் ஆனவர்களாய் இருந்தாலும், நெருங்கிய நண்பர்களாய் இருந்தாலும், உறவினர்களாய் இருந்தாலும், இவர்களுக்கு எல்லாம் நான்கு விசேஷங்களைப் போதனை செய்து, விளக்கி, தெளிவுபடுத்தி அதில் இவர்களை நிலைநாட்ட வேண்டும், நிலை நிறுத்த வேண்டும். எவை நான்கும்?"*

1) "புத்தரிடம் பூரண பக்தி கொள்ள வேண்டும், என இவர்களுக்குப் போதனை செய்து, விளக்கி, தெளிவுபடுத்தி, அதில்

*இவர்களை நிலை நாட்ட வேண்டும், நிலை நிறுத்த வேண்டும். அதாவது,*

*"பகவான் முற்றுப் பெற்றவர்; பூரண ஞானம் பெற்றவர்; அறமும் அறிவும் நிறைந்தவர்; அற வழியில் நடப்பவர்; எல்லா உலகங்களையும் அறிந்தவர்; பயிற்சிக்குக் கட்டுப்படும் மனிதர்களை அடக்கிப் பழக்குவதில் நிகரில்லாதவர்; மனிதர்களுக்கும் தெய்வங்-களுக்கும் உபதேசம் செய்பவர்; முதல்வர், பகவான் புத்தர்.*

*"என இவர்களுக்குப் போதனை செய்து, விளக்கி, தெளிவுபடுத்தி, பக்தியில் இவர்களை நிலைநாட்ட வேண்டும், நிலைநிறுத்த வேண்டும்.*

*"பிக்சுகளே, நான்கு மூலப் பொருள்களான நிலம், நீர், நெருப்பு, காற்று இவற்றில் மாறுதல்கள் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆனால், பகவான் புத்தரிடம் பூரண பக்தி கொண்ட சிஷ்யரிடம் மாறுதல் ஏற்படாது. இங்கு மாறுதல் என்பதன் பொருள் என்னவென்றால், இத்தகைய ஒருவர், மரணத்திற்கு அப்பால், மறுபிறப்பில், நரகத்தில் பிறப்பார் என்பது; மிருக உலகில் பிறப்பார் என்பது; பேய் உலகில் பிறப்பார் என்பது நடைபெறாது, ஒருபோதும் நடவாது.'*

(விளக்கம்: நிலம், நீர், நெருப்பு, காற்று இவை நான்கும் மூலப் பொருள்கள். இவை மாறுவதில்லை. மாறாத இவை நான்கும் ஒருகால் மாறினாலும் மாறலாம், ஆனால், பகவான் புத்தரிடம் பூரண பக்தி கொண்ட ஒருவர், மரணத்திற்கு அப்பால், மறு பிறப்பில் நரகத்தில் பிறப்பார் என்பது, மிருக உலகில் பிறப்பார் என்பது, பேய் உலகில் பிறப்பார் என்பது ஒருபோதும் நடவாது.

அதாவது, பகவான் புத்தரிடம் பூரண பக்தி கொண்ட ஒருவர், இனிமேலும் நரகத்திலோ, மிருகமாகவோ, பேயாகவோ பிறப்பதில்லை. இப்பிறப்புகளை அவர் அழித்துவிட்டார். உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், அவர் தவறாது தெய்வலோகத்தில் பிறப்பார்.

இது பகவான் புத்தர் இவ்வுலகிற்கு வழங்கும் உத்தரவாதம். இந்த

உத்தரவாதத்தின் மூலம் பகவான் புத்தர் உயிர்களுக்கு எல்லாக் காலங்களிலும் பாதுகாப்பும், தஞ்சமும் அளிக்கிறார்.)

*ii) "தர்மத்தை, (பகவான் புத்தர் அருளிய தர்ம உபதேசத்தை) முழுமையாக நம்ப வேண்டும், என இவர்களுக்குப் போதனை செய்து, விளக்கி, தெளிவுபடுத்தி, அதில் இவர்களை நிலை நாட்ட வேண்டும், நிலை நிறுத்த வேண்டும். அதாவது,"*

*"மிகத் தெளிவாக பகவான் தர்மத்தை (தர்ம உபதேசத்தை) அறிவித்துள்ளார். இந்த வாழ்விலேயே அதன் நன்மைகளை நாம் காணலாம். தர்ம உபதேசம் கால வரம்பற்றது, எல்லோரையும் அழைக்கின்றது; நல்வழியைக் காட்டுகின்றது; அறிவுடையோர் தர்ம உபதேசத்தைப் புரிந்து கொள்ளலாம்"*

*"என இவர்களுக்குப் போதனை செய்து, விளக்கி, தெளிவுபடுத்தி, தர்ம உபதேசத்தில் இவர்களை நிலை நாட்ட வேண்டும், நிலை நிறுத்த வேண்டும்."*

*"பிக்சுகளே, நான்கு மூலப் பொருள் களான நிலம், நீர், நெருப்பு, காற்று இவற்றில் மாறுதல் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆனால், தர்ம உபதேசத்தில் தடுமாற்றமில்லாத, உறுதியான, பூரண நம்பிக்கையுள்ள ஒரு சிஷ்யரிடம் மாறுதல் ஏற்படாது. இங்கு "மாறுதல்" என்பதன் பொருள், என்னவென்றால், இத்தகைய ஒருவர் மரணத்திற்கு அப்பால், மறு பிறப்பில், நரகத்தில் பிறப்பார் என்பது, மிருக உலகில் பிறப்பார் என்பது, பேய் உலகில் பிறப்பார் என்பது நடைபெறாது, ஒரு போதும் நடவாது.*

(*விளக்கம்*, தர்ம உபதேசத்தில் பூரண நம்பிக்கை உள்ள ஒரு சிஷ்யர், மரணத்திற்கு அப்பால், மறுபிறப்பில், நரகத்திலோ, மிருக மாகவோ, பேயாகவோ பிறப்பதில்லை. எல்லாத் துன்பப் பிறவிகளையும் இவர் அழித்துவிட்டார். உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அவர் தவறாமல் தெய்வ லோகத்தில் பிறப்பார்.

இதுவும் பகவான் புத்தர் உலகிற்கு வழங்கும் உத்தரவாதம். இந்த உத்தரவாதம் எந்தக் காலத்திலும் பொய்யாவதில்லை. இந்த உத்தரவாதத்தின் மூலமும் பகவான் புத்தர் உயிர்களுக்கு எல்லாக் காலங்களிலும் பாதுகாப்பும் தஞ்சமும் அளிக்கிறார்.)

*iii) "சங்கத்தில் பூரண நம்பிக்கை வேண்டும் என இவர்களுக்குப் போதனை செய்து, விளக்கி, தெளிவுபடுத்தி, அதில் இவர்களை நிலைநாட்ட வேண்டும், நிலைநிறுத்த வேண்டும்."*

*"பிக்சுகளே, நான்கு மூலப் பொருள்களான நிலம், நீர், நெருப்பு, காற்று இவற்றில் மாறுதல் ஏற்பட்டாலும் ஏற்படலாம் ஆனால் சங்கத்தில் பூரண நம்பிக்கை உள்ள ஒரு சிஷ்யரிடம் மாறுதல் ஏற்படாது. இங்கு "மாறுதல்" என்பதன் பொருள் யாதெனில், இத்தகைய ஒருவர், மரணத்திற்கு அப்பால், மறுபிறப்பில், நரகத்தில் பிறப்பார் என்பது, மிருக உலகில் பிறப்பார் என்பது, பேய் உலகில் பிறப்பார் என்பது நடைபெறாது, ஒருபோதும் நடவாது."*

(விளக்கம்: இதுவும் பகவான் புத்தர் இவ்வுலகிற்கு வழங்கும் உத்தரவாதம். இந்த உத்தரவாதமும் எந்தக் காலத்திலும் பொய்யாவதில்லை. இந்த உத்தரவாதத்தின் மூலமும் பகவான் புத்தர் உயிர்களுக்கு எல்லாக் காலங்களிலும் பாதுகாப்பும் தஞ்சமும் அளிக்கிறார்)

*iv) "சான்றோர் போற்றும் நல்லொழுக்க நெறிகளை இவர்களுக்குப் போதனை செய்து, விளக்கி, தெளிவுபடுத்தி: இடைவிடாத, தொடர்ச்சியான, களங்கமில்லாத, முரண்-பாடில்லாத நல்லொழுக்க நெறிகளில் இவர்களை நிலைநாட்ட வேண்டும், நிலைநிறுத்த வேண்டும்."*

*"பிக்சுகளே, நான்கு மூலப் பொருள் களான நிலம், நீர், நெருப்பு காற்று, இவற்றில் மாறுதல் ஏற்பட்டாலும் ஏற்படலாம், ஆனால், சான்றோர் போற்றும் நல்லொழுக்க நெறிகளில் ஒழுகும் ஒருவரிடம் மாறுதல் ஏற்படாது. இங்கு மாறுதல் என்பதன் பொருள் யாதெனில், இத்தகைய ஒருவர்,*

*மரணத்திற்கு அப்பால், மறுபிறப்பில், நரகத்தில் பிறப்பார் என்பது, மிருக உலகில் பிறப்பார் என்பது, பேய் உலகில் பிறப்பார் என்பது நடைபெறாது, ஒருபோதும் நடவாது.*

(விளக்கம்: சான்றோர் போற்றும் நல்லொழுக்கம் எவை? பொய், களவு, உயிர்க் கொலை, விபச்சாரம், போதைப் பொருள் இவற்றைத் தவிர்த்து, நல்வழியில் நடந்து, நல்வாழ்வு வாழ்வதாகும்.

எவரொருவர் சான்றோர் போற்றும் நல்லொழுக்க நெறிகளில் ஒழுகி, நல்வாழ்வு வாழ்கின்றாரோ, அவர், மரணத்திற்கு அப்பால், மறுபிறப்பில், நரகத்திலோ, மிருகமாகவோ, பேயாகவோ பிறக்கமாட்டார் என்றும், தவறாமல் தெய்வலோகத்தில் பிறப்பார் என்றும் பகவான் புத்தர் உத்தரவாதம் அளிக்கிறார்.)

*ஆகவே, பிக்சுகளே, எவரிடமெல்லாம் உங்களுக்கு அனுதாபம் உண்டோ; எவரெல்லாம் உங்கள் பேச்சைக் கருத்துடன் கேட்க வேண்டும் எனக் கருதுகிறார்களோ இத்தகையோர் உங்களுக்கு அறிமுகமானவர்கள் ஆனாலும்; நெருங்கிய நண்பர்கள் ஆனாலும்; உறவினர்கள் ஆனாலும்; இவர்களுக்கெல்லாம் இந்த நான்கு விசேஷங்களையும் போதனை செய்து, விளக்கி, தெளிவுபடுத்தி, அதில் இவர்களை நிலைநாட்ட வேண்டும், நிலை நிலைநிறுத்த வேண்டும்."*

(விளக்கம்: பகவான் புத்தரிடம் பூரண பக்தியும், பகவான் புத்தர் அருளிய தர்ம உபதேசங்களில் பூரண நம்பிக்கையும்; சங்கத்தில் பூரண நம்பிக்கையும், சான்றோர் போற்றும் நல்லொழுக்க நெறிகளும், இவை நான்கும், துன்பப் பிறப்புகளைக் கடக்கும் வழிகள், தெய்வலோகத்திற்குப் போகும் வழிகள்.

இவ்வழிகளில் செல்வோர், தங்களுடைய இவ்வுலக வாழ்வு முடிவுற்ற பின், மரணத்திற்கு அப்பால், மறுபிறப்பில் தெய்வலோகத்தில் பிறப்பார்கள். தெய்வலோகங்களிலும் மரணம் உண்டாகையால், இவர்களுடைய தெய்வலோக வாழ்வு முடிவுக்கு வந்தபோது, அங்கு இறந்து, மீண்டும் தெய்வலோகங்களிலோ, அல்லது மானிட உலகிலோ மட்டுமே பிறப்பார்கள்.

இனிமேலும் இவர்கள் நரகத்திலோ, மிருகமாகவோ, பேயாகவோ, துன்ப நிலைகளிலோ பிறப்பதில்லை. இவர்கள் இப்பிறப்புகளை எல்லாம் அழித்துவிட்டார்கள், கடந்து விட்டார்கள்.)

## *8.6 மன்னாதி மன்னர்.*

ஒரு சமயம் பகவான் புத்தர் சவத்தி பட்டணத்தில் தங்கியிருந்தார். அங்குத் தம் சிஷ்யர்களுக்கு இப்படி ஓர் உபதேசம் செய்தார்:

*"பிக்சுகளே, நான்கு கண்டங்களையும் வென்று ஆட்சி புரிந்த ஒரு மன்னாதி மன்னன்; உடலை விட்டு உயிர் பிரிந்த பின், மரணத்திற்கு அப்பால், மறுபிறப்பில், இந்திர லோகத்தில் பிறந்து இன்புற்ற போதிலும்; தெய்வலோகக் கன்னிகைகள் பணிவிடை செய்ய, தெய்வலோக இன்பங்களில் களிப்புற்ற போதிலும், இவர் இன்னும் மிருகப் பிறப்பில் இருந்து விடுபட வில்லை; பேய்ப்பிறப்பிலிருந்து விடுபடவில்லை; நரகப் பிறப்பிலிருந்து விடு படவில்லை; துன்ப நிலைகளிலிருந்து விடுபடவில்லை; வீழ்ச்சியிலிருந்து விடுபடவில்லை."*

(விளக்கம்: நான்கு கண்டங்களையும் வென்ற ஒரு மன்னாதி மன்னனும், மரணத்திற்கு அப்பால், மறுபிறப்பில் இந்திர லோகத்தில் பிறந்து இன்புற்ற போதிலும், இவர் இன்னும் மிருகப் பிறப்பிலிருந்தும், பேய்ப்பிறப்பிலிருந்தும், நரகப் பிறப்பிலிருந்தும், துன்ப நிலைகளிலிருந்தும் விடுபடவில்லை.

மானிட உலகில், தான் செய்த நற்செயல்களின் காரணமாக இப்போது இவர் தெய்வ லோகத்தில் பிறந்து இன்புற்ற போதிலும், தெய்வ லோக வாழ்விற்கும் முடிவு உண்டு என்பதால், இவருடைய தெய்வ லோக வாழ்வு முடிவுற்றதும், கீழ்ப் பிறப்புகளுக்குள் விழுந்து விடுவார்.

மிருகப் பிறப்பிலிருந்தும், பேய்ப்பிறப்பில் இருந்தும், நரகப் பிறப்பிலிருந்தும், துன்ப நிலைகளிலிருந்தும் இன்னும் இவர் விடுபட

வில்லை; இப்பிறப்புகளை இவர் இன்னும் கடக்கவில்லை; இப்பிறப்புகளை இன்னும் இவர் அழிக்கவில்லை. அதாவது, நான்கு கண்டங்களையும் வென்ற ஒரு மன்னாதி மன்னனும், துன்பப் பிறப்புகளிலிருந்து இன்னும் விடுப்பு வில்லை.)

*“பிக்சுகளே, நன்னடத்தையுள்ள ஒரு சிஷ்யர், இங்கும்-அங்கும் யாசித்து வாழ்ந்த போதிலும், கந்தை அணிந்திருந்த போதிலும், இவர் எளிய வாழ்வு வாழ்ந்த போதிலும், இவரிடம் நான்கு செல்வங்கள் உண்டு என்பதால், இவர் மிருகப் பிறப்பிலிருந்து விடுபட்டு விட்டார்; பேய்ப் பிறப்பிலிருந்து விடுபட்டு விட்டார்; நரகப் பிறப்பிலிருந்து விடுபட்டு விட்டார்; துன்ப நிலைகளிலிருந்து விடுபட்டு விட்டார்."*

(விளக்கம்: நன்னெறிகளில் ஒழுகி, நல்வழியில் நடக்கும் ஒருவர், ஏழ்மையான வாழ்வு வாழ்ந்த போதிலும்; இவர் ஏழையே ஆயினும், எளிய வாழ்வு வாழ்ந்தாலும், இவரிடம் நான்கு செல்வங்கள் உண்டு; இவர் நான்கு செல்வங்களுக்கு அதிபர்.

அதன் காரணமாக இவர் மிருகப் பிறப்பிலிருந்து விடுபட்டு விட்டார்; பேய்ப்பிறப்பிலிருந்து விடுபட்டு விட்டார்; நரகப் பிறப்பிலிருந்து விடுபட்டு விட்டார்; துன்ப நிலைகளிலிருந்து விடுபட்டு விட்டார். இவர் இப்பிறப்புகளை எல்லாம் கடந்துவிட்டார்; அழித்து விட்டார்.

உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், மரணத்திற்கு அப்பால், மறுபிறப்பில், இவர் தெய்வலோகத்தில் பிறப்பார். தெய்வலோக வாழ்வு முடிவுற்றதும், இவர் மீண்டும் தெய்வலோகங்களில் அல்லது மானிட உலகில் மட்டுமே பிறப்பார். கீழ்ப் பிறப்புகளுக்குள் இவர் இனிமேலும் விழ மாட்டார். இவரிடம் உள்ள நான்கு செல்வங்கள் எவை? இதைப் பகவான் புத்தர் இப்போது கூறுகிறார்:)

*"பிக்சுகளே, எவை இந்த நான்கு செல்வங்கள்?’’*

*i) "புத்தரிடம் இவருக்குத் தடுமாற்றம் இல்லாத, உறுதியான, பூரண பக்தி உண்டு."*

II) *"தர்ம உபதேசத்தில் இவருக்குத் தடுமாற்றம் இல்லாத, உறுதியான, பூரண பக்தி உண்டு."*

III) *"சங்கத்தில் இவருக்குத் தடுமாற்றம் இல்லாத, உறுதியான, பூரண நம்பிக்கை உண்டு."*

IV) *"சான்றோர் போற்றும் நல்லொழுக்க நெறிகளில் இவருக்கு நாட்டமுண்டு. இவர் நடத்தையில் இடைவிடாத, தொடர்ச்சியான, முரண்பாடில்லாத, களங்கமில்லாத நல்லொழுக்கம் உண்டு.*

*"இவையே இவரிடமுள்ள நான்கு செல்வங்கள்."*

*"பிக்சுகளே, நான்கு கண்டங்களையும் வெல்ல முயல்வோரும் உண்டு. இந்த நான்கு செல்வங்களையும் வெல்ல முயல்வோரும் உண்டு. ஆனால், இந்த நான்கு செல்வங்களை வெல்வதிலுள்ள சிறப்பில் , பதினாறில் ஒரு பாகம் கூட நான்கு கண்டங்களை வெல்வதில் இல்லை."*

(விளக்கம்: நான்கு கண்டங்களையும் வென்று ஆட்சி புரிந்த ஒரு மன்னாதி மன்னன்; நான்கு கண்டங்களையும் வென்ற போதிலும், இந்த நான்கு செல்வங்களையும் இவர் தேடவில்லை. துன்பப் பிறப்புகளிலிருந்து மீட்கும் இந்த நான்கு செல்வங்களையும் இவர் தேடிப் பெறவில்லை என்பதால், துன்பப் பிறப்புகளிலிருந்து, இவர் இன்னும் விடுபடவில்லை; துன்பப் பிறப்புகளை இவர் இன்னும் கடக்க வில்லை.

ஆனால் எளிய வாழ்வு வாழ்ந்த ஒருவர், ஏழைய ஆயினும், இந்த நான்கு செல்வங்களையும் தேடிப் பெற்றிருந்தாரென்றால், இவர் துன்பப் பிறப்புகளை எல்லாம் கடந்து விட்டார்; அழித்து விட்டார். ஆகவே, நான்கு கண்டங்களையும் வெல்வதை விட, இந்த நான்கு செல்வங்களையும் வெல்வதே சிறப்பு.)

---

# *9. மந்திரி நந்திகர்.*

ஒரு சமயம் பகவான் புத்தர் வைசாலி பட்டணத்தில் தங்கியிருந்தார். அப்போது மந்திரி நந்திகர் பகவானைக் காண வந்தார். பகவான் புத்தருக்கு வணக்கம் தெரிவித்த பின், ஒருபுறமாக அமர்ந்தார். பகவான் புத்தர் மந்திரி நந்திகருக்கு இப்படி ஓர் உபதேசம் செய்தார்:

*"நந்திகரே, எவரொருவரிடம் நான்கு செல்வங்கள் உண்டோ; எவரொருவர் நான்கு செல்வங்களைப் பெற்றிருக்கின்றாரோ, அவருக்கு இனி வீழ்ச்சி இல்லை; துன்ப விதி இல்லை. அவர் "நதியைக் கடப்பவர்; மோட்சம் அவருக்கு நிச்சயம்.*

*"எந்த நான்கு செல்வங்கள்?"*

*"நந்திகரே, இங்கு, அவருக்குப் புத்தரிடம் உறுதியான, தடுமாற்றமில்லாத, பூரண நம்பிக்கை உண்டு."*

*"அவருக்குத் தர்மத்தில் (பகவான் புத்தர் அருளிய தர்ம உபதேசங்களில்) உறுதியான, தடுமாற்றமில்லாத பூரண நம்பிக்கை உண்டு."*

*"அவருக்குச் சங்கத்தில் உறுதியான, தடுமாற்றமில்லாத, பூரண நம்பிக்கை உண்டு."*

*(அதாவது, சங்கத்தை மதித்து மரியாதை செய்து, வணங்கி; அங்கு தானமும், நற்செயல்களும் செய்வதில், இவருக்குப் பூரண நம்பிக்கை உண்டு.)*

*"அவரிடம் சான்றோர் போற்றும் நல்லொழுக்க நெறிகள் உண்டு. அவர் நடத்தையில் இடைவிடாத, தொடர்ச்சியான, களங்கமில்லாத, முரண்பாடில்லாத நல்லொழுக்கம் உண்டு,*

*"நந்திகரே, இந்த நான்கு செல்வங்களையும் பெற்றுள்ள ஒருவர், நீண்ட மானிட வாழ்வையும், நீண்ட தெய்வலோக*

*வாழ்வையும் பெறுவார்; அழகும், சுகமும், செல்வாக்கும் பெறுவார். புகழோடு வாழ்வார்."*

*"நந்திகரே, இதை எல்லாம் பிறரிடம் இருந்து கேட்டு நான் உங்களுக்குச் சொல்லவில்லை. நானே பார்த்து, அறிந்து, உறுதிபடுத்திய பின், உங்களுக்குக் கூறுகிறேன்."*

பகவான் புத்தர் மந்திரி நந்திகருக்கு இவ்வாறு உபதேசம் செய்து கொண்டிருந்த போது, யாரோ ஒருவர் நந்திகரை அணுகி, அவரிடம் இவ்வாறு கூறினார்:

"எஜமான் தாங்கள் குளிப்பதற்கு நேரம் ஆகிவிட்டது."

நந்திகர் அவரிடம் இவ்வாறு கூறினார்:

"குளித்தது போதும். புறத்தே கழுவியது போதும். தற்போது எனக்குத் தேவை அகத்தைக் கழுவுவதே! பகவான் புத்தரிடம் உள்ள பக்தியினால் அகத்தைக் கழுவும் இந்தக் குளியல் எனக்குப் போதும்."

---

## *10. சொர்க்கத்தில் பிறந்த அனாத பிண்டகர்.*

பகவான் புத்தர் காலத்தில் இந்தியாவில் சவத்தி என்றொரு பட்டணம் இருந்தது. அனாத பிண்டகர் என்பவர் சவத்திப் பட்டணத்தில் பிறந்தார். இவருடைய தந்தை ஒரு செல்வந்தர். இவருடைய உண்மைப் பெயர் சுதார்த்தர். இவர் இரக்க குணமுள்ளவர்; கருணை உள்ளம் கொண்டவர்.

அப்பட்டணத்து அனாதைகளுக்கும், ஆதரவற்றோருக்கும், ஏழை எளியோருக்கும், இவர், தான தர்மங்கள் செய்து, அவர்களுடைய துயரக் கண்ணிரைத் துடைத்து வந்தார். இதன் காரணமாக, அப்பட்டணத்து மக்கள் இவரை “அனாத பிண்டகர்” என்று அன்புடன் அழைத்தார்கள். இப்பெயரே இவருக்கு நிலைத்துவிட்டது.

சவத்திப் பட்டணத்திற்கு அருகில் இராஜகிரகம் என்றொரு பட்டணம் இருந்தது. இப்பட்டணத்தில் வாழ்ந்த ஒரு செல்வந்தரின் சகோதரியை அனாத பிண்டகர் திருமணம் செய்திருந்தார். ஒரு சமயம், அனாத பிண்டகர் இராஜகிரகத்தில் வாழ்ந்த தம் மைத்துனரைக் காணச் சென்றார். அப்பொழுது, பகவான் புத்தரைச் சந்திக்கும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது.

பகவான் புத்தரைச் சந்தித்த அக்கணமே, இவர் உள்ளத்தில் பூரண பக்தி எழுந்தது. சவத்திக்குத் திரும்பியதும், பகவான் புத்தருக்கு ஒரு மடம் அமைக்க விரும்பினார். மடம் அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தைச் சவத்திப் பட்டணம் முழுதும் தேடினார்.

அவ்வூர் மன்னரின் பூங்காதான் மடம் அமைப்பதற்குப் பொருத்தமான இடம் எனக் கருதினார். பெரும் அளவிலான தங்கத்தைக் கொடுத்துப் பூங்காவை மன்னரிடமிருந்து வாங்கி, அங்கு ஒரு மடத்தை அமைத்தார்.

பகவான் புத்தர் சவத்திக்கு வருகை தந்தபோது, பூங்காவையும், மடத்தையும் பகவான் புத்தருக்கு நன்கொடையாக அளித்தார். பகவான் புத்தரும் அதை ஏற்று, சவத்திப் பட்டணத்திற்கு வந்த போதெல்லாம் அங்கு தங்கி, அப்பட்டணத்து மக்களுக்குத் தர்ம உபதேசம் செய்தார்.

அனாத பிண்டகர், பகவான் புத்தரிடம் தடுமாற்றமில்லாத, உறுதியான, பூரண பக்தி கொண்டவர். பகவான் புத்தர் அருளிய தர்ம உபதேசங்களில், பூரண நம்பிக்கை உள்ளவர். சங்கத்தை மதித்து, மரியாதை செய்து, வணங்கி, அங்குத் தானமும், நன்கொடைகளும் செய்து வந்தார். பெரியோர் போற்றும் நல்லொழுக்க நெறிகளில் ஒழுகி, பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சி, புண்ணிய காரியங்கள் செய்து, நல்வாழ்வு வாழ்ந்து வந்தார்.

பகவான் புத்தர் இறப்பதற்கு முன்னதாகவே, அனாத பிண்டகர் மரணமடைந்தார். அவர் நோயுற்றிருந்தபோது, பகவான் புத்தரின் சிஷ்யர்களான மதிப்பிற்குரிய சாரிபுத்திரரும், மதிப்பு மிக்க ஆனந்தரும்

இவரைக் காணச் சென்றார்கள். மதிப்பிற்குரிய சாரி புத்திரர் அனாத பிண்டகருக்கு உபதேசம் செய்து ஆறுதல் கூறினார். தொடர்ந்து, மதிப்பு மிக்க ஆனந்தர், அனாத பிண்டகருக்கு இப்படி ஓர் உபதேசம் செய்து ஆறுதல் கூறினார்

ஆனந்தர்:

இல்லற வாழ்வு வாழும் நண்பரே, தங்களால் வேதனையைத் தாங்க முடிகின்றதா; பொறுத்துக் கொள்ள முடிகின்றதா; வேதனை கூடுகின்றதா, குறைகின்றதா?

அனாத பிண்டகர்:

ஐயா, வேதனை கூடுகின்றதே தவிர குறையவில்லை; என்னால் வேதனையைத் தாங்க முடியவில்லை.

ஆனந்தர்:

இல்லற வாழ்வு வாழும் நண்பரே, அச்சமும் நடுக்கமும் மரணபயமும், அடுத்த உலகில் நம் கதி என்னவோ எனும் பீதியும்:- இவை யாவும், எவரிடமெல்லாம் நான்கு விசேஷ குணங்கள் இல்லையோ அவர்களை வருத்தும்.

எவை நான்கும்:

i) கல்வி இல்லாத மக்கள், உள்ளத்தில் பக்தியில்லாத மக்கள், :- இவர்களுக்கு உள்ளத்தில் பக்தி இல்லை என்பதால், அச்சமும், நடுக்கமும், மரண பயமும்; அடுத்த உலகில் நம் கதி என்னவோ என்ற பீதியும் இவர்களை வருத்தும்.

(விளக்கம்: இவர்களிடம் பக்தி எனும் விசேஷ குணம் இல்லை என்பதால், மரண பயம் இவர்களை வருத்தும்.)

ii) கல்வி இல்லாத மக்கள், தர்மத்தில் நம்பிக்கை இல்லாத மக்கள்:- இவர்களுக்குத் தர்ம உபதேசத்தில் நம்பபிக்கை இல்லை என்பதால்,

அச்சமும், நடுக்கமும், மரண பயமும், அடுத்த உலகில் நம் கதி என்னவோ என்ற பீதியும் இவர்களை வருத்தும்.

(விளக்கம்: இவர்களிடம் தர்ம உபதேசத்தை நம்பும் விசேஷ குணம் இல்லை என்பதால், மரண பயம் இவர்களை வருத்தும்.)

III) கல்வி இல்லாத மக்கள், சங்கத்தில் நம்பிக்கை இல்லாத மக்கள்:- இவர்களுக்குச் சங்கத்தில் நம்பிக்கை இல்லை என்பதால், அச்சமும், நடுக்கமும், மரண பயமும் அடுத்த உலகில் நம் கதி என்னவோ என்ற பீதியும் இவர்களை வருத்தும்.

IV) கல்வி இல்லாத மக்கள், சான்றோர் போற்றும் நல்லொழுக்க நெறிகளில் நாட்டமில்லாத மக்கள்:- இவர்கள் நடத்தையில் நல்லொழுக்கமில்லை என்பதால், அச்சமும், நடுக்கமும, மரண பயமும், அடுத்த உலகில் நம் கதி என்னவோ என்ற பீதியும் இவர்களை வருத்தும்.

(விளக்கம்: சான்றோர் போற்றும் நல்லொழுக்க நெறிகளை நாடி, அதில் ஒழுகும் விசேஷ குணம் இவர்களிடம் இல்லை என்பதால், மரண பயம் இவர்களை வருத்தும்.)

ஆனால், இல்லற வாழ்வு வாழும் நண்பரே, அச்சமும், நடுக்கமும், மரண பயமும், அடுத்த உலகில் நம் கதி என்னவோ என்ற பீதியும்:- இவை யாவும் நான்கு விசேஷ குணங்களைப் பெற்றுள்ள மக்களை வருத்துவதில்லை.

எவை நான்கும்:

i) கல்வி அறிவும், உள்ளத்தில் பக்தியும் உள்ள மக்கள்: - இவர்களுக்கு உள்ளத்தில் பக்தி உண்டு என்பதால், அச்சமும், நடுக்கமும், மரண பயமும், அடுத்த உலகில் நம் கதி என்னவோ என்ற பீதியும் இவர்களை வருத்துவதில்லை.

(விளக்கம்: இவர்களிடம் பக்தி எனும் விசேஷ குணம் உண்டு என்பதால், மரண பயம் இவர்களை வருத்துவதில்லை.)

மரண பயம் இவர்களை வருத்துவதில்லை.)

II) கல்வி அறிவும், தர்ம உபதேசத்தில் நம்பிக்கையும் உள்ள மக்கள் :- இவர்களுக்குத் தர்ம உபதேசத்தில் நம்பிக்கை உண்டு என்பதால், அச்சமும், நடுக்கமும், மரண பயமும், அடுத்த உலகில் நம் கதி என்னவோ என்ற பீதியும் இவர்களை வருத்துவதில்லை.)

(விளக்கம்: இவர்களிடம் தர்ம உபதேசத்தை நம்பும் விசேஷ குணம் உண்டு என்பதால், மரண பயம் இவர்களை வருத்துவதில்லை.)

III) கல்வி அறிவும் சங்கத்தில் நம்பிக்கையும், உள்ள மக்கள் :- இவர்களுக்குச் சங்கத்தில் நம்பிக்கை உண்டு என்பதால், அச்சமும், நடுக்கமும், மரண பயமும், அடுத்த உலகில் நம் கதி என்னவோ என்ற பீதியும் இவர்களை வருத்துவதில்லை.

IV) கல்வி அறிவும் சான்றோர் போற்றும் நல்லொழுக்க நெறிகளில் நாட்டமும் உள்ள மக்கள்:- இவர்கள் நடத்தையில் ஒழுக்கம் உண்டு என்பதால், அச்சமும், நடுக்கமும் , மரண பயமும் , அடுத்த உலகில் என் கதி என்னவோ என்ற பீதியும் இவர்களை வருத்துவதில்லை.

(விளக்கம்: சான்றோர் போற்றும் நல்லொழுக்க நெறிகளை நாடி, அதில் ஒழுகும் விசேஷ குணம் இவர்களிடம் உண்டு என்பதால் , மரண பயம் இவர்களை வருத்துவதில்லை.)

அனாத பிண்டகர்:

"வணக்கத்திற்குரிய ஆனந்தரே, எனக்கு அச்சமில்லை! எப்படி என் உள்ளத்தில் அச்சம் எழும்? பகவான் புத்தரிடம் எனக்குப் பூரண பக்தி உண்டு; தர்ம உபதேசத்தில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு, சங்கத்தில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு; இல்லற வாழ்வு வாழ்வோருக்கு உரிய நல்லொழுக்க நெறிகளில் ஒரு குறைகூட என்னிடம் நான் காணவில்லை. எப்படி என் உள்ளத்தில் அச்சம் எழும்?"

ஆனந்தர்:

எல்லாம் தங்கள் நன்மைக்கே! துன்பப் பிறவிகளைக் "நதியைக் கடக்கும் மார்க்கத்தை தாங்கள் கூறிவிட்டீர்கள்.

சில நாட்கள் கழித்து, அனாத பிண்டகர் ம ரணமடைந்தார். உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், மரணத்திற்கு அப்பால் மறுபிறப்பில், சுவர்க்கத்தில் பிறந்தார்.

சுவர்க்கத்தில் பிறந்துவிட்ட அனாத பிண்டகர், பகவான் புத்தரைக் காண சுவர்க்கத்திலிருந்து இவ்வுலகிற்கு வந்தார். இப்போது அவர் ஒரு தேவகுமாரன்.

ஓர் இரவு, தேவகுமாரனாகிய அனாத பிண்டகர், பகவான் புத்தர் முன் தோன்றினார். அவருடைய உடல் ஜோதி மயமாகத் தோன்றியது. அவருடைய உடலிலிருந்து வந்த ஒளியினால் அந்தப் பூங்கா வனமே பேரொளியுடன் விளங்கியது. தேவகுமாரன் பகவான் புத்தரை வணங்கிய பின், ஒருபுறமாக ஒதுங்கி நின்று, புத்தரையும், தர்மத்தையும், சங்கத்தையும் புகழ்ந்து பாடிய பின், தொடர்ந்து இவ்வாறும் பாடினார் :

*"அன்புடைமையும், கல்வி அறிவும் , தன்னடக்கமும்,*
*அறநெறியில் ஒழுகி தூய்மையான வாழ்வு வாழ்தலும்,*
*இவையே மனிதர்களைத் தூய்மைப் படுத்தும்.*
*பிறப்பினாலும் இல்லை, செல்வத்தாலும் இல்லை.*

*ஆகையால் , தன் நலனை விரும்பும் அறிவுடையோர்,*
*நல்வழி எதுவெனத் தேடி,*
*அதில் தன் மனத்தை முழுமையாகப் பழக்கட்டும்.*
*இதுவே தூய்மைக்கு வழி."*

எனத் தேவகுமாரனாகிய அனாத பிண்டகர் பாடினார். இப்படிப் பாடிய பின், பகவான் புத்தரை வணங்கினார். பகவான் புத்தரை வணங்கிய பின், எப்படித் தோன்றினாரோ அப்படியே , அவ்விடத்திலேயே மறைந்துவிட்டார்.

மதிப்பிற்குரிய ஆனந்தர், தோன்றி மறைந்த தேவகுமாரன் யார் என்று பகவான் புத்தரிடம் கேட்டார்.

"தோன்றி மறைந்த தேவகுமாரன் வேறு யாருமல்ல. அவர்தான் அனாத பிண்டகர். அவர் தற்போது சுவர்க்கத்தில் பிறந்துள்ளார் " என்று பகவான் புத்தர் கூறினார்.

(விளக்கம்: அனாத பிண்டகர் எல்லாத் துன்பப் பிறப்புகளையும் கடந்துவிட்டவர். நரகப் பிறப்பு, மிருகப் பிறப்பு, பேய்ப்பிறப்பு, யாவற்றையும் அழித்துவிட்டார். இவர் மோட்சத்தை நோக்கிச் செல்கிறார். இவர் மோட்சம் அடைவது நிச்சயம். இவருக்கு அதிகபட்சம் இன்னும் ஏழு பிறப்புகளே உண்டு. மானிட உலகிலும், தெய்வலோகங்களிலும் மட்டும் இன்னும் அதிக பட்சம் ஏழு தடவைகளே பிறக்கும் இவர், இந்த ஏழு பிறப்புகளுக்குள் மோட்சமடைவார்.)

---

## *11. அரிது அரிது மானிடப் பிறப்பு.*

*ஒரு சமயம், பகவான் புத்தர், தம் சிஷ்யர்களுக்குப் இப்படி ஓர் உபதேசம் செய்தார்.*

*"பிக்சுகளே, இந்தப் பரந்த பூமி ஒரே நீர் மயமாக இருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள், அங்கு ஒருவர் ஒரு நுகத்தடியை (மரத்தினால் செய்யப்பட்ட துவாரமுள்ள ஒரு வடிவம்) எரிவதாகக் எண்ணிக் கொள்ளுங்கள். அது அலைகளாலும், காற்றாலும் இங்குமங்கும் தள்ளப்பட்டு, நீரில் மிதந்து செல்லும்.*

*இந்த நீரில் வாழும் ஒருகுருட்டு ஆமை, நூறு ஆண்டுகளுக்கு ஒரு தடவை, தன் தலையை நீருக்கு மேலே தூக்குவதாக எண்ணிக் கொள்ளுங்கள். நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை தன் தலையை ருக்கு மேலே தூக்கும் குருட்டு ஆமை, தன் தலையை நீருக்கு மேலே தூக்கும் போதெல்லாம், நுகத்தடியிலுள்ள துவாரத்தில் தன் தலையை நுழைக்க முடியுமா?"*

*"பகவான் நாம் இதை எதிர்பார்க்க முடியாது."*

(அதாவது, இது எப்போது நடக்கும் என நாம் உறுதியாகக் கூற முடியாது. வெகு நீண்ட காலத்திற்குப் பின், அவ்வப்போது இது நடைபெறலாம்.)

*"பிக்சுகளே, அதுபோல்தான் , மானிடப்பிறப்பு எதிர்பார்க்க முடியாத ஒரு பிறப்பு; அதுபோல்தான், பூரண ஞான அறிவு பெற்ற ததாகதர் (புத்தர்) உலகில் தோன்றுதல் எதிர்பார்க்க முடியாத ஒரு சம்பவம்; அதுபோல்தான், ததாகதரின் தர்ம உபதேசம் உலகில் பிரகடனம் செய்யப்படுவதுவும் எதிர்பார்க்க முடியாத ஒன்று."*

*"ஆனால் பிக்சுகளே, இப்போது மானிடப் பிறப்பு கிடைத்துள்ளது; ததாகதர் (புத்தர்) உலகில் தோன்றியுள்ளார். ததாகதரின் தர்ம உபதேசம் உலகில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது."*

*"ஆகவே, பிக்சுகளே. முயற்சி செய்யுங்கள்"*

(விளக்கம்: மானிடப் பிறப்பும் அரிது; புத்தர் உலகில் தோன்றுதலும் அரிது; தர்ம உபதேசம் உலகில் பிரகடனம் செய்யப்படுவதுவும் அரிது. இம்மூன்றும் அரிதானவை. அப்படியிருக்கும்போது, இம்மூன்றும் ஒருங்கே நடைபெறுவதென்பது எதிர்பார்க்க முடியாதது; நடவாதது. அப்படியே நடந்தாலும் வெகு நீண்ட காலத்திற்குப் பின், அவ்வப்போது இது நடைபெறலாம்.)

இப்போது நமக்கு மானிடப் பிறப்பு கிடைத்துள்ளது. நாம் வாழும் இக்காலத்தில், புத்தர் உலகில் தோன்றியுள்ளார். தர்ம உபதேசம் உலகில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இம்மூன்றையும் ஒருங்கே பெறுவது, எதிபார்க்க முடியாத ஒன்று; நடவாத ஒன்று.

ஆனால், இப்போது நாம் இம்மூன்றையும் ஒருங்கே பெற்றுள்ளோம். கிடைப்பதற்கரிய இந்த வாய்ப்பை நாம் இழந்துவிடக் கூடாது. இழந்துவிட்டோமென்றால், இனி எப்போது நமக்கு இப்படி ஒரு வாய்ப்பு கிடைக்கும்.

இதை அறிந்து, உள்ளத்தில் பக்தி கொண்டு; தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்டு; மானிடப் பிறப்பின் பெருமையை உணர்ந்து; மானிடப் பிறப்பிற்கு ஏற்ப வாழ வேண்டும்; "மானிட வாழ்வு வாழ வேண்டும்." இதுவே, மானிடப் பிறப்பில், உயிர்கள் அடையும் பெரும் பாக்கியமாகும்.)

***அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல்;***
***அரிது அரிது மானிட வாழ்க்கை***
***அரிது அரிது நல்லறம் (தர்ம உபதேசம்) கேட்டல்;***
***அரிது அரிது புத்தர் தோன்றுதல்.***

**(பகவான் புத்தர்)**

--------------------------------------------------

# மற்ற வெளியீடுகள்

1. அறவழி
2. தீவினையச்சம்
3. நல்வினைப்பயன்
4. கோபத்தினால் விளையும் தீமைகள்
5. இல்லற வாழ்க்கை
6. ஒழுக்கமுடைமை
7. உன் செயல்களுக்கு நீயே வாரிசு
8. மரணம்
9. அறிவுடைமை
10. இளமையில் சிந்திக்க வேண்டியவை
11. விரதம்
12. தண்டனை
13. கோபத்தை வெல்லும் வழி
14. ஓர் இளைஞனுக்கு பகவான் புத்தர் கூறிய அறிவுரை
15. மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்
16. பொய்யான பக்தி
17. தாயும் தந்தையும்
18. மனசாட்சி இல்லாதவர்கள்
19. கருணை
20. அநாத பிண்டகர்
21. சேமவதி
22. பாவிகள்
23. நல்வாழ்வு
24. நான்கு மனைவிகள்
25. குற்றம் உணர்ந்து திருந்துதல்
26. அன்புடைமை
27. நன்றி மறந்தவர்கள்
28. அன்புடையோரும் அன்பில்லாதோரும்
29. ஒதுக்கப்பட்டவர்கள்
30. நேர்மை
31. பேராசை
32. நன்றியுடைமை
33. அடக்கமுடைமை
34. நல்லது செய்தால் நல்லது விளையும்
35. மன்னிப்பு
36. குற்றம்